Book 10

# புதிய நினைவூட்டல்

மாத இதழ்

அல்லாஹ்
கடவுள்
GOD
பகவான்
ஹுதா
} = 1

உங்கள் கடவுள் ஒரே கடவுள்; அவரைத் தவிர வேறு தெய்வம் இல்லை, மிக்க அருளாளர், மிக்க அன்பாளார்.

அல் குர்ஆன் -2:163

ஜுன்
2000
June

PUTHIYA NINAIVOOTAL
TAMIL MONTHLY

# எளிய உண்மைகள்

**குர்ஆனைப் போலவே குர்ஆனுடைய அற்புதக் கணிதக் குறியீடும் மிக எளிமையாகவும், அதே நேரம் ஆழ்ந்த சிந்தனை தேவைப்படக்கூடியதாகவும் விரிந்துள்ளது. இங்கே கூறப்பட்டுள்ள மிக எளிய உண்மைகளை உறுதிப்படுத்திக் கொள்ள நமக்கு எந்த கருவிகளும் தேவையில்லை. விரிவான அமைப்புடைய உண்மைகளை அறிந்து கொள்ள ஒரு கால்குலேட்டரோ, அல்லது கம்ப்யூட்டரோ தேவைப்படுகிறது. கீழே கொடுக்கப்பட்டுள்ள உண்மைகளை சரிபார்த்துக் கொள்ள எந்த கருவிகளும் தேவையில்லை.**

1. குர் ஆனின் முதல் வசனமான பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம் என்பதில் இடம் பெறும் அரபி எழுத்துக்கள் ........................................................................ 19
2. குர்ஆன் 114 சூராக்களை கொண்டது 114 = ........................................................ 19x6
3. குர் ஆனின் மொத்த வசனங்களின் எண்ணிக்கை 6346 ........................................ 19x334
   (அதில் எண்ணிடப்பட்டது 6234, எண்ணிடப்படாதது 112 (பிஸ் மிக்கள்)
   6234 + 112 = 6346 கவனிக்க 6+3+4+ 6 = 19
4. 'பிஸ்மில்லாஹ்' குர் ஆனில் 114 முறை உள்ளது 114 .............................................19X6
   ( சூரா 9ல் பிஸ்மி இல்லாவிட்டாலும் 19 சூராக்கள் தள்ளி 27வது
   சூராவில் இரு முறை உள்ள) சூரா 27 வசனம் 30 ஆக 27+30 = 57.......................... 19x3
5. பிஸ்மில்லாஹ் இல்லாத சூரா 9ற்கும் பிஸ்மில்லாஹ் இருமுறை
   இடம் பெறும் சூரா 27க்கும் இடையில் இடம் பெறும் சூராக்கள்............................19
6. பிஸ்மி இல்லாத சூரா 9 முதல் பிஸ்மி இருமுறை இடம் பெறும்
   சூராவான 27 வரை கூட்டினால் (9+10+11.... 27) வரும் கூட்டுத்தொகை 342 = .....19x18
7. இதில் முக்கிய விஷயம் என்ன வென்றால் இருமுறை பிஸ்மி
   இடம் பெறும் சூராவில் முதல் பிஸ்மிக்கும் இரண்டாம்
   பிஸ்மிக்கும் இடையில் உள்ள வார்த்தைகள் சரியாக அதே 342 = ..........................19x18
8. புகழ்பெற்ற முதல் வஹீ (96:1 முதல் 5) யில் இடம் பெறும்
   வார்த்தைகள் சரியாக ............................................................................................. 19
9. 19 வார்த்தைகள் கொண்ட அந்த முதல் வஹீயில் இடம் பெறும்
   எழுத்துக்கள் சரியாக 76 ......................................................................................... 19x4
10. இறக்கப்பட்ட வரிசையில் முதல் சூராவான 96ல் இடம் பெறும் வசனங்கள் ...........19
11. இந்த சூரா, இடது புறத்திலிருந்து புரட்டினால் வருவது ..............................19வது இடத்தில்
12. 96ம் சூரா முழுதும் இடம்பெறும் எழுத்துக்கள் 304 ............................................. 19x16
13. இறுதி வஹீயான சூரா 110ல் இடம் பெறும் வார்த்தைகளும் சரியாக ................... 19
14. கடைசி வெளிப்பாட்டின் (சூரா 110:1) முதல் வசனத்தில் இருப்பது ........... 19 எழுத்துக்கள்
15. 29 சூராக்களின் ஆரம்பங்களில் வரும் 14 எழுத்துக்கள் கொண்டு அமைக்கப்பட்ட
    14 வகையான முத்திரை எழுத்துக்கள் (உம்) அலிப், லாம், மீம்) இவற்றைக்
    கூட்ட 29+14+14 = 57 = ......................................................................................... 19x3
16. முத்திரை எழுத்துக்கள் அமைந்த 29 சூராக்களின் சூரா எண்களைக் கூட்ட
    (2+3+7+ ...... + 50+ 68) = 822 அத்துடன் 14 ஐக் கூட்ட (அதாவது 14 வகைகள்)
    = 822+14 = 836 = .......................................................................................................19x44
17. முத்திரை எழுத்து கொண்ட முதல் சூராவான 2க்கும் முத்திரை
    எழுத்து கொண்ட கடைசி சூராவான 68க்கும் இடையில்
    முத்திரை எழுத்து இல்லாத சூராக்கள் 38 உள்ளன ............................................... 19x2
18. முதல் முத்திரை சூராவிலிருந்து கடைசி முத்திரை சூரா வரை முத்திரையிட்டதும்
    முத்திரையிடாதது மாக மாறி மாறி வருவது .............................................. 19 விதமாக
19. குர்ஆனில் 30 எண்கள் குறிப்பிடப்படுகின்றன. அவை 1, 2, 3,
    4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 19, 20, 30, 40, 50, 60, 70,
    80, 99, 100, 200, 300, 1000, 2,000, 3,000, 5,000,
    50,000 & 1,00,000 இந்த எண்க ளின் கூட்டுத் தொகை 1,62,146 .......................... 19x8534

மிக்க அருளும் மிக்க அன்பும் உடைய இறைவனின் பெயரால்.

இந்த மக்கள் பேசும் பேச்சுக்களை நாம் நன்கறிகின்றோம்.இவர்களை நிர்பந்தப்படுத்தி ஏற்கச் செய்வது உமது பணியல்ல என் எச்சரிக்கைக்கு அஞ்சுகின்ற ஒவ்வொருவருக்கும் நீர் இந்த குர்ஆனைக் கொண்டு அறிவுரை கூறுவீராக! (50:45)

# புதிய நினைவூட்டல்

## ஓர் உலகம், ஓர் இறை, ஒரே செய்தி


செய்தி 1

ஜுன் 2000
நினைவு 5


குறிப்பு:- உண்மையான இறையச்ச முடையவர்களே மேம்போக்காக எதையும் படிக்காமல் வசன எண்களை உங்களிடமுள்ள குர்ஆனை ஒப்பிட்டு பார்த்து சிந்தித்து விளங்கிக் கொள்ளுங்கள்.


ஆசிரியர் :
C.S. ரஃபியுத்தீன்

துணை ஆசிரியர் :
N.A. அஹமது ஹுசைன்



தனிச்சுற்று இதழ்

சந்தா விபரம்

உள் நாடு ஓராண்டு ரூ. 60.00

தனி பிரதி ரூ. 5.00

புதிய நினைவூட்டல் மாத இதழ்

அலுவலகம்


## இதழின் உள்ளே


★ ஆன்மீக விஞ்ஞானம்
★ இறுதி நாளின் அடையாளங்கள்
★ பரிந்துரை - ஷஃபாஅத்
★ அர்த்தம், அனர்த்தம்
★ குர்ஆன் மட்டும் போதாதா?
★ இப்றாஹிம் நபியின் கனவில் ஷைத்தான்
★ புனித புத்தகம் குர்ஆன்
★ முகம்மது நபியை எவ்வாறு இணை வைக்கிறோம்?
★ யார் பொய்யர்கள் என்பதை நாளை அறிந்து கொள்வார்கள்.

# ஆன்மீக விஞ்ஞானம்

இன்று உலகில் உள்ள குழப்பங்களாலும், பிரச்சனைகளாலும் மன நிம்மதி இழந்து தவிக்கும் மனிதர்கள் அனைவரின் கவனமும் ஆன்மீகத்தின் பக்கம் திரும்பி இருக்கிறது. மனிதர்களின் வாழ்வுக்கு வசதிகள் செய்து கொள்ள அவர்கள் கண்டறிந்த விஞ்ஞானமும் மிகவும் வளர்ச்சியடைந்த நிலையில் உள்ளது. ஆன்மீகமும் விஞ்ஞானமும் ஒன்றுக்கொன்று முரண்பட்டதாக ஒருபோதும் இருக்க முடியாது. ஏனெனில் ஆன்மீகம் என்பது பிரபஞ்சங்கள் அனைத்தையும் படைத்து, தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் கடவுளைப் பற்றியது. விஞ்ஞானம் என்பது பிரபஞ்சத்தின் கட்டுப்பாட்டு விதிகளை அவற்றை நாம் எப்படிப் பிரயோகித்தால் பலனடைய முடியும் என்பதைப் பற்றியது. நிரூபிக்கப்பட்ட விஞ்ஞான உண்மைக்கும், ஆன்மீகத்திற்கும் இடையில் ஏதேனும் கருத்து முரண்பாடுகள் காட்டப்படுமாயின் அந்தக் கருத்துத்தான் தவறாகுமே அன்றி ஆன்மீகமோ அல்லது விஞ்ஞானமோ) தவறானதாக ஆகிவிடாது.

விஞ்ஞானத்தில் வளர்ச்சியடைந்த ஆன்மீக அறிவுத் தாகம் கொண்ட மனிதன் இன்று ஆன்மீக விஞ்ஞானம் என்ற பதத்தையும்கண்டுபிடித்திருக்கின்றான். ஆயினும் ஆன்மீகத்தையும் விஞ்ஞானத்தையும் ஒன்றினைக்கும் இந்த அறிவுப்பிரிவில் மனிதன் இன்று ஆரம்ப நிலையிலேயே இருக்கின்றான் என்பதே உண்மை.

பரிசோதனைகள் செய்து, அவற்றை உன்னிப்பாகக் கவனித்து, அதிலிருந்து முடிவுகளைப் பெற்று அதன் மூலம் பலனடைவது விஞ்ஞானத்தின் வழிமுறையாகும். இத்தகைய பரிசோதனைகளுக்கு ஆன்மீகத்தில் இடமில்லை, அது நம்பிக்கை சம்பந்தப்பட்டது மட்டுமே' என்பது விஞ்ஞானத்திலும், ஆன்மீகத்திலும் அறிவுக்குறைபாடு உள்ளவர்களின் கூற்றேயாகும். நாம் இத்தகைய பரிசோதனை முயற்சி ஒன்றை ஆன்மீகத்தில் செய்து ஒரு விடையைக் காண முயற்சிப்போம்.

மனிதர்களில் பெரும்பாலோர் கடவுள் ஒருவர் இருக்கிறார் என்பதை நம்பக் கூடியவர்களாக உள்ளனர்.

கடவுள் இல்லை என்ற நாத்திகக் கருத்து வலுவிழந்ததாக ஆகிவிட்டது. நாத்திகத்தின் எல்லா வாதங்களும் பற்பல ஆன்மீக அறிஞர்களால், நல்லவர்களால் முறியடிக்கப்பட்டு விட்டது. தவிரவும் நாத்திகர்கள் கூட நம் அனைவரையும் மிஞ்சி "ஒரு - சக்தி" இப்பிரபஞ்சங்களைக் ச கட்டுப்படுத்திக் கொண்டிருக்கிறது எ என்ற உண்மையை மறுக்க இயலாது. அ விஞ்ஞானமும் இப்பிரபஞ்சம் - முழுவதும் ஒரு சக்திக்கு" கட்டுப்பட்டதாகவே உள்ளது என்பதை மு ஆதாரபூர்வமாக அறிவிக்கிறது.

மனிதர்களில் பெரும்பாலானோர் கடவுள் ஒருவர் இருக்கின்றார் என்று ஒப்புக்கொண்டாலும் அறிந்திருந்தாலும், யார் அந்தக் கடவுள் என்பதிலும், அவருடன் வேறுயாரும் துணைக் கடவுள்கள் உள்ளனரா, அவர்கள் யார் யார் என்பதிலும், மேலும் எதன் மூலம் அக்கடவுளைத் தொடர்பு கொள்ள, அடைய முடியும் என்பதிலும் ஏராளமான கருத்து வேறுபாடுகள் மனிதர்களனை வரையும் பிளவு படுத்திக் கொண்டிருக்கிறது. எனவே இக்கேள்விகளுக்கு விடைகாணும் முகமாக நாம் ஒவ்வொருவரும், தனிப்பட்ட முறையில், நேரடியாக ஒரு பரிசோதனையைச் செய்து அதன் மூலம் விடையை அடைந்து கொள்ள முயற்சிப்போம். இது ஆன்மீக விஞ்ஞானத்தில் முதல்படியாகவும் நாம் கொள்ளலாம்.

## ஆன்மீக விஞ்ஞானம் பரிசோதனைப் பாடம் : 1. இறைவன் உள்ளாரா?

குறி: இறைவன் இருக்கின்றாரா, அவர் மனிதர்களைச் செவியேற்று அவர்களுக்குப் பதிலளிக்கக் கூடியவர்தானா, எதன் மூலம் அல்லது எந்த வழிமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் நாம் அவரின் திருப்தியை அடைய முடியும் என்பதைக் கண்டறிவது. (அழைத்தால் பதிலளிக்க முடியாத கடவுளின் தேவை நமக்கு இல்லை அல்லவா?)

### தேவையான சாதனங்கள் :

உன்னிப்பாக, உலகைக் கவனிக்கும் கண்கள்', பதிலைச் செவியேற்கத் தயாராக உள்ள, கூறுவதைப் புரிந்து கொள்ளக் கூடிய காதுகள்', குத்தப்பட்டு, குத்துப்பட்டுச் செத்துப்போகாத மனசு.செயல்முறை : இன்று உலகில் உள்ள அனைத்து மதங்களும், அவற்றின் வேதங்களும் இறைவன் எல்லா மனிதர்களின் குரலையும் கேட்கக் கூடியவராகவும், பதிலளிக்கக் கூடியவராகவும் உள்ளார் என்று தெளிவாகக் கூறுகின்றன. நிரூபிக்கப்பட்ட இறுதி இறை வேதமான அல்குர் ஆனும் இக்கருத்தை அழகாகக் கூறுகிறது.

அவர்கள் என்னை அழைத்தால் நான் அவர்களின் அழைப்புக்கு பதிலளிப்பேன் (2:186)

எனவே, நாம் அனைவரும் தனிப்பட்ட முறையில் இறைவன் என்ற ஒருவர் இருக்கின்றாரா என்பதைப் பரிசோதித்து அறிந்து கொண்டால் நாம் உறுதியுடையவர்களாகவும்,இறைவனின் திருப்தியைப் பெறக்கூடியவர்களாக ஆகவும் முடியும் அல்லவா? கடவுளை எவ்வாறு அழைப்பது? அல்லாஹ் என்றா, கர்த்தரே என்றா அல்லது ராமரே அல்லது வேறு ஒரு ஏதேனும் ஒரு பெயர் கொண்டா? இவை அனைத்தும் ஏதேனும் மதம் சார்ந்தவர்கள் மட்டுமே பிரயோகிக்கும் சொற்களே ஆகும். இவற்றில் எந்தப்பெயர் கடவுள் அங்கீகாரம் பெற்றது என்பதைக் கடவுள்தான் நமக்கு அறிவிக்க வேண்டும். எனவே நாம் கடவுளை அவருடைய முதல் பெயரான கடவுள் என்பதைக் கொண்டு அழைத்தால் சந்தேகத்திற்கிடமின்றி நாம் கடவுளையே அழைத்தவர்கள் ஆவோம்.

எனவே நாம் அனைவரும் கீழே கொடுக்கப்பட்டுள்ள படி இறைவனை அழைத்துப் பார்ப்போம். அவர் பதிலுக்காகக் காத்திருப்போம். கடவுள் என்று ஒருவர் இருந்தால் அவர் நமக்குப் பதிலளிக்க வேண்டும் அல்லவா?

“எங்கள் கடவுளே நீர் என்னைச் செவியேற்றால் என் அழைப்புக்கு பதில் தாரும். உம்மை நான் எவ்வாறு அறிவது? பேராற்றல் நிறைந்தவரான உமது திருப்தியை நான் அடைவது? என்னை நேர்வழி நடத்தும். நான் இவ்வுலகிலும், இறந்த பின்னரும் நல்வாழ்வு வாழ உதவும் வழிமுறைகளை எனக்கு அறிவித்துத் தாரும். என் சந்தேகங்களைப் போக்கி, கேள்விகளுக்குப் பதில் தந்து என்னை உறுதிப்படுத்தும். உமது பதிலுக்காகக் காத்திருக்கும் உம்முடைய படைப்பே நான்'.

மேற்கண்ட பிரார்த்தனையின் அடிப்படையில் (தத்தம் தேவைக்கேற்ப சிற்சில மாறுதல்களை பிரார்த்திப்பவர்கள் செய்து கொள்ளலாம்) சலனமற்ற ஏதாவது ஒருநேரம் (அதிகாலையாக இருந்தால் நல்லது அல்லவா?) அவரவர்க்கு எது வசதியோ அப்படி உட்கார்ந்து கொண்டு மனதை ஒருமுகப்படுத்தி,உளத்தூய்மையுடன் நாம் பிரார்த்தனை செய்தால் நிச்சயம் இறைவனின் பதிலை நாம் ஒவ்வொருவரும் கேட்கலாம். அவரை உணர்ந்து கொள்ளலாம். ஆன்மீகப் பேரின்பம் அடையலாம்.

**பரிசோதனையின் முடிவு**: உறுதி செய்யப்பட்ட நிலையில் நிச்சயம் இறைவன் இருக்கின்றார். (இப் பரிசோதனையைச் செய்பவர்கள் தங்கள் அனுபவங்களை எழுதி அனுப்பினால் அவை பிரசுரிக்கப் படலாம்) * -ஆர்

# இறுதி நாளின் அடையாளங்கள்

மார்ச் 2000 தேதியிட்ட புதிய நினைவூட்டல் இதழில் குர்ஆனில் கூறப்படும் உலக முடிவு நாளின் அடையாளங்களான, (1) 1969 ல் நிலவு பிளக்கப்பட்டது,(2) குர்ஆனில் 19ன் அடிப்படையிலான அற்புதக் கணிதக் கட்டமைப்புக் கண்டுபிடிக்கப்பட்டது, (3)தாப்பத்தம் மினல் அர்ள்- பூமியிலிருந்து ஒரு படைப்பு- பிராணி -(Computer) வெளிப்பட்டு மனிதர்கள் தங்கள் இறைவனின் வார்த்தைகளில் உறுதி இல்லாமல் இருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக் காட்டுவது ஆகியவற்றை விரிவாகக் கண்டோம். இனி, நாம் தொடர்ந்து மறுமை நாளின் மற்ற அடையாளங்களையும் காண்போம்.

மெய்ப்பிக்கும் தூதரின் வருகை (3.81) : திருக்குர்ஆ னின் 3:81 ம் எண்ணிட்ட வசனம் 'நபிமார்களுக்கு வேதமும் ஞானமும் கொடுக்கப்பட்ட பின்னர், மக்களிடம் உள்ளதை மெய்ப்பிக்கும் தூதரின் வருகையை முன்னறிவிக்கிறது. நமது இதழில் மெய்ப்பிக்கும் தூதரைக் குறித்த பற்பல செய்திகள், அவருடைய ஆதாரங்கள், அவருடைய பணிகள் ஆகியவற்றைத் தொடர்ந்து கண்டு வருகிறோம். இன்றைய உலகில் கிறித்துவம், இஸ்லாம், யூதம் ஆகியவை உள்ளிட்ட அனைத்து மதங்களும் பாழாக்கப்பட்டு விட்டதால் அவற்றைத் தூய்மைப்படுத்தி, அவற்றை ஒன்றுபடுத்தி அடிபணிதல் (இஸ்லாம்) என்ற மார்க்கத்தை அவர் மீண்டும் நிர்மாணித்தார் என்பதையும் அறிந்து கொண்டோம். அனைத்து வேதங்களையும் சூழ்ந்திருந்த கசடுகளை, சிதைவுகளை அவர் தெளிவு படுத்தி, வேதங்கள் அனைத்தும் இறைவனால் அருளப் பட்டவையே என்பதற்கும், அவற்றில் முழுமையாகப் பாதுகாக்கப்பட்டதாக, இறுதி வேதமான அல்குர்ஆன் இருக்கிறது என்பதற்குமான நிரூபணங்களையும் தந்தார். இதன் மூலம் அல்குர்ஆன் இறைவனால் மனித குலத்திற்கு அனுப்பப்பட்ட இறுதி வேதம் தான் என்பது சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டது.

இறைவன் தன் அடியார்கள் மேல் இரக்கப்பட்டு, அவர்களுக்கு வழிகாட்ட அருளிய பிரித்தறிவுக்கும் வேதமான அல்குர்ஆனில் தூதர்களுக்கான அடையாங்களை

விவரித்துக் கூறுகிறார். அவற்றில் முதலாவதாக, தூதர்கள் யாவரும் இறைவனை மட்டுமே கலப்பின்றி வணங்க வேண்டும், என்ற அடிப்படைச் செய்தியை வலியுறுத்திக் கூறுவார்கள். மெய்ப்பிக்கும் தூதரான ரஷாத் கலீஃபாலின் பிரசாரமும் இறைவனை - மட்டுமே நாம் ஒருமையுடன், கலப்பின்றி வணங்க வேண்டும் என்பதாகவே இருந்தது. இதனைப் பிரசாரம் செய்யவே அவர் தன் வாழ்வை அர்ப்பணித்தார். இரண்டவதாக, தூதர்கள் இறைவனிடமிருந்து பெற்ற தெளிவான ╒ ஆதாரங்களுடன் வருவர்கள். Dr. ரஷாத்கலீஃபா 1400 வருடங்களாக குர்ஆனில் மறைக்கப்பட்டிருந்த ஒரு ரகசிய செய்தியை (Coded Message) உலகிற்குத் தெளிவுபடுத்தினார், (Decoded). இறைவனின் மாபெரும் அற்புதங்களில் ஒன்றான 19ன் அடிப்படையிலான கட்டமைப்பு அல்குர் ஆன் முழுவதையும்- மெய்ப்பித்து, அதில் இடம்பெறும்ஒவ்வொருவிஷயமும் இறைவனிடமிருந்துதான் வந்தது என்பதற்கும் அது முழுமையாகப் பாதுகாக்கப்பட்டிருக்கிறது என்பதற்கும் உரிய ஆதாரங்களைத் தருகிறது என்பதை நம் இதழின் முந்திய வெளியீடுகளில் கண்டு வருகிறோம். அறிவுடைய ஒவ்வொருவருக்கும் Dr. ரஷாத் கலீஃபா இறைவனின் அங்கீகாரம் பெற்ற தூதர்தான் என்பதற்கான சான்றளிப்பதாகவும் அது விளங்குகிறது.

மேலும் தூதர்களின் அடையாளமாக குர் ஆன் கூறும் மூன்றாவது தகுதி, தூதர்கள் தங்கள் தூதுத்துவத்திற்காக கூலி எதையும் பெற்று கொள்ள மாட்டார்கள் என்பதாகும். இஸ்லாமிய உலகம் அவரை நன்கறிந்து, போற்றிப் புகழ்ந்து கொண்டிருந்த போது தன்னைத் தூதர் என்று அறிவித்ததால் அவர் தன் புகழை இழந்ததோடு மட்டுமில்லாமல், பொய்யன் என்றும் பைத்தியக்காரன் என்றும் இகழப்பட்டார். அவர் உயிர் ஆபத்திற்குள்ளானது. (இது அவர் தன் தூதுத்துவத்து கென்று கூலி எதுவும் பெற்றுக் கொள்ள வில்லை என்பதையும் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது). இருப்பினும் தன் இரட்சகரின் கட்டளைப்படி அவர் தன் தூதுச்செய்தியை முழுமையாக எத்தி வைத்தார். ஷைத்தானின் தோழர்களால் (இறைவனின் திட்டப்படி) அவரது உயிரைப் பறிக்க முடிந்ததே தவிர அவரது செய்தி பரவுவதைத் தடுக்க முடியவில்லை. இன்று குர் ஆனை மெய்ப்பிக்கப்பட்ட நிலையில் அவர் விட்டுச் சென்றிருப்பதால் உலகம் முழுவதும் இறுதி இறை வேதமானா

அல்குர்ஆனின் பக்கம் பார்வையைத் திருப்பியிருக்கிறது.

இவ்வாறாக, இறைவன் தன் தூதர்களுக்கான அடையாளங்கள் என்று கூறுபவற்றை ரஷாத் கலீஃபா முழுமையாகப் பூர்த்தி செய்தார். மேலும் அவர் தன் தூதுத்துவத்திற்கு ஏராளமான ஆதாரங்களை தந்தார். ஆயினும், அவர் இறைத் தூதர் இல்லை என்பதற்கான ஒரு காரணத்தைக் கூட அவரது எதிரிகளால் கூறமுடியவில்லை.

அல்குர் ஆன் இவ்வுலகிற்கு இறுதி வேதம். 1400 வருடங்களுக்கு முன் அருளப்பட்டு பின்னர் அது புறக்கணிக்கப்பட்டுவிட்டது என்பது வரலாறு கூறும் உண்மை. இந்நிலை ஏற்படும் என்பதையும் குர் ஆன் முன்னரே அறிவித்தது. (25:30) ஆயினும் இறைவனுக்கு அடிபணிதல் என்ற மார்க்கம் எல்லா மார்க்கங்களையும் மிகைத்து வெற்றி பெறும் என்ற இறைவனின் வாக்குறுதி நிறைவேற வேண்டியிருப்பதால் புறக்கணிக்கப்பட்ட இறுதிவேதமான அல்குர் ஆன் இன்று மெய்ப்பிக்கப்பட்டு விட்டதும் இறுதி நாளின் வருகைக்கு ஓர்அறிகுறியாகும்.

### புகை - 'துகான்' (44:10)

குர்ஆனில் முன்னறிவிக்கப்பட்ட இறுதி நாளின் அடையாளங்களில் அடுத்தது, இறைவனை மட்டும் கலப்பின்றி வணங்காதவர்களை' கடுமையாக நோவினை செய்யும் 'புகை' ஆகும். இது மெய்ப்பிக்கும் தூதர் தன் தூதுச் செய்தியை உலகிற்குத் தந்தவுடன், அதாவது குர்ஆனை மெய்ப்பித்து அனைத்து இறைத் தூதர்களின் தூதுச் செய்திகளையும் ஒன்றினைத்து இறைவனுக்கு அடிபணிதல் (இஸ்லாம்) மட்டுமே இறைவனால் அங்கீகரிக்கப்பட்ட ஒரே மார்க்கம் என்பதைப் பிரகடனம் செய்தவுடன் நிகழ வேண்டியது ஆகும்.

இம்முன்னறிவிப்பைக் கூறும் இறை வசனங்கள் 44:9 9-16 வரை உள்ள விஷயங்களை இங்குக் காண்போம்.

'நிச்சயமாக அவர்கள் சந்தேகத்திலும், அலட்சியத்திலும் இருக்கிறார்கள்'. எனவே, வானம் ஒரு ஆழமான புகையைக் கொண்டு வரும் நாளுக்காகக் காத்திருப்பீராக.

மனிதர்களை மூடிக் கொள்ளும்; அது நோவினை செய்யும் தண்டனையாகும். "எங்கள் இரட்சகரே, எங்களுக்கு இந்தத் தண்டனையை நீக்குவீராக, இப்போது நாங்கள் நம்பிக்கை கொண்டோம்". இப்போது மிகவும் தாமதமானதன் பின் நீங்கள் நம்புகிறீர்கள். ஆனால் அறிவுறுத்தும் ஒரு தூதர் உங்களிடம் வந்திருந்தார். ஆனால் அவர்கள் அவரை விட்டுத் திரும்பி. 'நன்கு கல்வி கற்றவர், ஆனால் கிறுக்குப் பிடித்தவர் என்று கூறினர்.

நாம் தண்டனையைச் சிறிது காலம் நீக்குவோம், ஆனால் நீங்கள் மீண்டும் அதையே செய்வீர்கள்.

இவ்வசனங்களில் மெய்ப்பிக்கும் தூதரை நம்ப மறுப்பதால் ஏற்படவிருக்கும் விளைவுகளை இறைவன் நமக்கு அறிவிக்கிறார்.

இறைவன் இவ்வசனங்களில் மனிதர்களை ஒரு கடுமையான புகை மண்டலம் மூடிக்கொள்ளும், வேதனை செய்யும் என்று தெளிவாகக் கூறுகிறார்.

இத்தகைய ஒரு பேரழிவு, பூமியை ஏதேனும் ஒரு விண்கல் தாக்கினால் ஏற்படக்கூடும் என்பதை விஞ்ஞானிகளும், வானவியல் வல்லுனர்களும் நன்கறிந்தே இருக்கிறார்கள். 1989ல் ஒரு மிகப் பெரிய விண்கல்லின் தாக்குதலில் இருந்து மயிரிழையில் பூமி தப்பியது. இவ்வுலகம் அனுபவித்த அந்தத் திகில் இறைவன் மனிதர்களுக்கு விடுத்த எச்சரிக்கையாகும்.

மேலும் இறைவனால் அனுப்பப்படும் இத்தகைய ஒரு பெரும் தண்டனை, பேரழிவு தூதர்கள் அனுப்பப்பட்டு அவர்களை மக்கள் நிராகரித்த பின்னரே ஏற்படும் என்பதையும் கூறுகிறது (17:15)

44:13ல் கூறப்படும் தூதர் மெய்ப்பிக்கும் தூதரான ரஷாத் கலீஃபாதான் என்பதற்கு ஏராளமான ஆதாரங்கள் உள்ளன.

1. இவ்வசனத்தின் அத்தியாய எண்ணான 44 உடன் வசன எண்ணான 13 ஐக் கூட்டினால் நமக்குக் கிடைக்கும் எண் 57= 19X 3. குர்ஆனில் உள்ள 19ன் அடிப்படையிலான அற்புதக் கணிதக் கட்டமைப்பு மெய்ப்பிக்கும் தூதர் ரஷாத் கலீஃபா அவர்களால் வெளிப்படுத்தப்பட்டது.

2. குர்ஆனின் துவக்கத்திலிருந்து 44:13 வரை உள்ள அத்தியாய எண்களையும் வசன எண்களையும் கூட்டினால் வருவது 5415 = 19 X 19X15.

3. இவ்வசனத்தில் இடம் பெறும் திக்ர்' (நினைவூட்டல்) என்ற வார்த்தையையே 19ன் அடிப்படையிலான கணிதக் கட்டமைப்புக்கும், இறைவன் பயன்படுத்தி இருக்கிறார். இந்தச் சக்திவாய்ந்த தொடர்பு 'புகை' யையும் (துகான்) இறைவனின் அற்புதத்தையும், மெய்ப்பிக்கும் தூதரையும் உறுதியான முறையில் தொடர்புபடுத்துகிறது.

4. இவ்வசனத்தில் தூதரைக் குறிக்க அவரது எதிரிகள் பயன்படுத்தும் வர்ணனை 'நன்கு கல்வி கற்றவர் ஆனால் கிறுக்குப் பிடித்தவர் என்பதாகும்.

இவ்வார்த்தைகள் மெய்ப்பிக்கும் தூதரைக் குறித்து அவர் உயிர் வாழ்ந்த போதே கூறப்பட்டு விட்டது.

ஹதீஸ்களைப் பின்பற்றுபவர்கள், அதற்கு வக்காலத்து வாங்குபவர்கள் தங்களுக்குத் தாங்களே முரண்படுவார்கள். இவ்வசனத்தில் கூறப்படும் தூதர் முஹம்மத் நபிதான் என்றும், இதில் கூறப்படும் புகையென்பது முஹம்மத் நபியின் காலத்தில் மக்காவில் ஏற்பட்ட பஞ்சத்தையே குறிக்கிறது என்றும் அவர்கள் கூறுவார்கள். ஆயினும் இவ்வசனத்தில் தூதரின் எதிரிகள் அவரை 'நன்கு கல்வி கற்றவர்' ஆனால் பைத்தியக்காரர் என்று கூறுகின்றனர். இவ்வசனத்தில் குறிப்படப்படும் தூதர் முஹம்மத் நபிதான் என்று கூறும் அவர்கள் முஹம்மத் நபி கல்வி கற்காதவர், எழுதப்படிக்க தெரியாதவர் என்றும் கூறுகின்றனர். தங்களுக்குத் தாங்களே முரண்பட்டுக் கொள்வது நிராகரிப்போரின் தன்மை என்று குர் ஆன் அடையாளம் காட்டுகிறது!.

இனிமேல் வரவிருக்கும் வேதனையை, தண்டனையை ஏற்கெனவே நிகழ்ந்து விட்டதாக ஷைத்தான் அவர்களை ஏமாற்றி விட்டதால் வரவிருக்கும் தண்டனை குறித்து அவர்கள் அச்சமில்லாமலும் அலட்சியமாகவும் இருக்கின்றனர். அது நிகழும் போது இவர்களின் நிலை என்னவாக இருக்கும்?
.

இப்போது புகை' (துகான்) பற்றி மெய்ப்பிக்கும் தூதர் ரஷாத் கலீஃபா கூறுவதை நாம் காண்போம். அவர் ஆசிரியராக இருந்த ஆங்கிலச் சிற்றிதழான MUSLIM Perspective என்ற மாத இதழில் துகான் பற்றி அவர் குறிப்பிடுவதாவது.

"ஒரு மிகப்பெரிய விண்கல் ஒன்று மத்திய கிழக்கு நாடுகளில் ஓர் இடத்தில் விழும்".

"அதன் விளைவாக ஏற்படும் வெப்பம் 100 மைல் சுற்றளவில் உள்ள உயிரினங்கள் அனைத்தையும் எரிக்கும்".

.
"இறைவன் அனுப்பிய மெய்ப்பிக்கும் தூதருக்கும், இறைவனின் அற்புதத்திற்கும், இறைவனுக்கும் முக்கிய விரோதிகளான அரபிகளின் உலகை முழுமையான பேரழிவு சூழ்ந்து கொள்ளும்.

"44:10-15 வசனங்களில் கூறப்படும் முன்னறிவிப்பு நிகழ்ந்தேறும் போது ஒரு மாபெரும் தூசு மண்டலம் முழு உலகையும் சூழ்ந்து கொண்டு சூரியனை மறைத்து அதன் ஒளியைச் சில மாதங்கள் வரை தடுத்துவிடும்". "எப்பொழுது இது நடக்கும்? எப்பொழுது என்று நான் அறிய மாட்டேன். ஆனால் இது 1990ன் முடிவுக்கு முன்னர் நடக்கும் என்ற ஓர் உறுதியான உணர்வு எனக்கு உள்ளது. சரியான நேரத்தை இறைவன் மட்டுமே அறிவார்".

வாசகர்கள் மெய்ப்பிக்கும் தூதர் இந்நிகழ்வு 1990க்குமுன் நிகழும் என்ற உணர்வு தனக்கு உள்ளதாக குறிப்பிட்டிருப்பதைக் கவனிக்க வேண்டும். . ஆயினும் 1990ல் அவ்வாறு நிகழவில்லை . இது, தூதர்களின் சுய அபிப்ராயங்களில் தவறுகள் நேரிடலாம். எனவே நம்பிக்கை கொண்டவர்கள் தூதர்களை எல்லாம் தெரிந்த இறைவனாகவும் எண்ணிவிடக் கூடாது - அவர்களும் நம்மை போன்ற மனிதர்களே என்பதை நமக்கு உணர்த்தும் ஒரு பாடமாக அமைகிறது.

தூதர்கள் சொல்வதையும் அவர்கள் எதன் அடிப்படையில் சொல்கிறார்கள், அதற்கு என்ன ஆதாரங்கள் தருகின்றார்கள், என்பதைச் சிந்தித்து விளங்கக் கொள்ள வேண்டும். இறைவனின் வார்த்தைகளைக் கூட குருட்டுத்தனமாக, சரியாக பார்க்காமலும், செவிட்டுத்தனமாக, சரியாக கேட்காமலும் செயல்படக்கூடாது என்று இறைவன் நமக்குக் கற்பிக்கிறார். மேலும் மெய்ப்பிக்கும் தூதர் மிகத் தெளிவாக இது தனக்கு ஏற்படும் ஓர் உறுதியான உணர்வு' மட்டுமே - நிச்சயமாக நடக்கும் என்பதல்ல என்றும் சரியான நேரத்தை இறைவன் மட்டுமே அறிவார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

தூதரின் உணர்வுப்படி 1990ல் இத்தகைய நிகழ்ச்சி எதுவும் நடக்கவில்லை எனினும் நிராகரிப்போர் இறைவனின் தண்டனையிலிருந்து தப்பிவிட முடியாது. இறைவனின் முன்னறிவிப்பு நிகழ்ந்தே தீரும்.

மத்திய கிழக்கு நாடுகளுக்கு தண்டனையான புகை வேதனை இதுவரை நிகழவில்லையென்றாலம் மத்திய கிழக்கு நாடுகள் அனைத்தும் இன்று சீரழிந்துகொண்டிருக்கின்றன. அவற்றுக்குள்ஏற்பட்ட போர்களினால் அந்நாடுகள் அனைத்திலும் ஏராளமான அழிவுகள் ஏற்பட்டு உள்ளன. அதன் பின் விளைவுகள் அவற்றை பல ஆண்டுகளுக்குப் பாதிப்பிற்குள்ளாக்கும் மும்பை யிலிருந்து வெளிவரும் 'Economic Times' என்ற இதழில் 1991 ஜுலை 2ந்தேதி வெளிவந்த செய்தி.

"வளை குடாவில் நூற்றுக்கணக்கான மைல்கள் கறுப்பு அலைகளால் மூடப்பட்டுள்ளது. சவுதி அரேபியாவின் வடகிழக்குக் கடற்பகுதி முழுவதும் கனமான கச்சா எண்ணெயால் மூடப்பட்டுள்ளது. வளைகுடாவின் இரு பகுதிகளிலும் மீன்பிடித் தொழில் மிகவும் பாதிக்கப்பட்டு விட்டது . ஆயிரக்கணக்கான கடல் பறவைகள் செத்து விட்டன.

பூமியை ஒரு விண்கல் தாக்குவது பற்றி, 1991 ஜூன் மாதத்தில் பூமியை 50 வருடங்களுக்குள் தாக்க இருக்கும் ஒரு விண்கல் பற்றிய செய்திகள் ஏராளமாக வெளிவந்தன. விஞ்ஞானிகள் இந்நிகழ்வு தவிர்க்க இயலாதது என்றே கருதுகிறார்கள். நியூயார்க்கைச் சேர்ந்த விஞ்ஞானக் கட்டுரைகள் எழுதும் வில்லியம் J. ப்ராட் கூறுகிறார், "இந்நிகழ்வு வானவியல் விதிகளின்படி எதிர்பார்க்கப்படுவதைவிட விரைவில் நிகழக் கூடும். விண்ணிலிருந்து பூமியை நோக்கி ஒரு நொடிக்கு 16 மைல் வேகத்தில் வந்து கொண்டிருக்கிறது ஒரு மாபெரும் மலை. அவ்விண்கல் பூமியின் மனிதர்கள் வாழும் தன்மையை மிகவும் சிதைத்து விடும். ஏராளமான கற்களும், புகையும் உலகைச் சூழ்ந்து ஏறக்குறைய சூரிய ஒளியை முழுமையாக மறைத்துவிடும்."

அரிஸோனா பல்கலைக்கழகத்தின் சந்திரன் மற்றும் கோள்களை ஆராயும் விஞ்ஞானப்பிரிவின் விரிவுரையாளர் டாம் ஜெர்ல்ஸ் கூறுகிறார் "நிச்சயமாக அது பூமியைத் தாக்கும். உலகை அழிவு நிலைக்குக் கொண்டு செல்லும். மேலும் வான வியல் விஞ்ஞானி க்ளார்க் R. சாப்மன் கூறுகிறார். பூமி நிச்சயம் அடிபடும். புள்ளியியலின்படி இது மிகவும் உறுதியானதாகும். மேலும் இது ஒரு விமான விபத்தில் சிக்கியவர்களுக்கு ஏற்படும் ஆபத்தைவிட அதிகமாகும். இதனால் ஏற்படக்கூடிய அழிவுகள் நம்மை நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்படி கூறக்கூடியதாக உள்ளது.

இவையெல்லாம் மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள இறைவனின் எதிரிகளுக்கான எச்சரிக்கை மணியே!.

பூமியை ஒரு விண்கல் தாக்குவது பற்றி, 1991 ஜூன் மாதத்தில் பூமியை 50 வருடங்களுக்குள் தாக்க இருக்கும் ஒரு விண்கல் பற்றிய செய்திகள் ஏராளமாக வெளிவந்தன. விஞ்ஞானிகள் இந்நிகழ்வு தவிர்க்க இயலாதது என்றே கருதுகிறார்கள். நியூயார்க்கைச் சேர்ந்த விஞ்ஞானக் கட்டுரைகள் எழுதும் வில்லியம் J. ப்ராட் கூறுகிறார், "இந்நிகழ்வு வான வியல் விதிகளின்படி எதிர்பார்க்கப்படுவதைவிட விரைவில் நிகழக் கூடும். விண்ணிலிருந்து

பூமியை நோக்கி ஒரு நொடிக்கு 16 மைல் வேகத்தில் வந்து கொண்டிருக்கிறது ஒரு மாபெரும் மலை. அவ்விண்கல் பூமியின் மனிதர்கள் வாழும் தன்மையை மிகவும் சிதைத்து விடும். ஏராளமான கற்களும், புகையும் உலகைச் சூழ்ந்து ஏறக்குறைய சூரிய ஒளியை முழுமையாக மறைத்து விடும்”.

சில விஞ்ஞானிகள் பூமிக்கு நேரக்கூடிய எந்த விபத்தையும் தடுத்து விடலாம் என்றும் கருதுகிறார்கள் (இக்கற்பனையின் திரைவடிவத்தை ARMEGEDDON' எனும் திரைப்படத்தில் காணலாம்). இறைவனின் விருப்பத்தை யாராலும் தடுத்து விட முடியாது என்பதை நாம் அறிந்திருக்கிறோம்.

இறைவனை மட்டும் வணங்க வேண்டும் என்ற செய்தியை மறுத்து, மெய்ப்பிக்கும் தூதரைக் கொலை செய்ததற்கு நிராகரிப்பாளர்கள் தண்டனை அனுபவித்தே தீரவேண்டும்.

சிலர் கூறலாம், "ஒரு தனி மனிதன் நிராகரிக்கப்பட்டு, கொலை செய்யப்பட்டதால் இத்தனை பெரிய அழிவு ஏற்படுமா?”


இவர்கள் மறுப்பது தூதர்களை அல்ல. இவர்கள் இறைவனைத்தான் மறுக்கிறார்கள் என்று குர் ஆன் நமக்குக் கூறுகிறது. எனவே எவரேனும் தூதரை, அவர் தூதுச் செய்தியை நிராகரித்தால் அவர்கள் மறுப்பது தனி மனிதர்களை அல்ல. இறைவனை! எனவேதான் இத்தகு தண்டனை. நமக்கு சந்தர்ப்பங்கள்
கொடுக்கப்படவில்லை என்று நாம் கூறவே முடியாது. ஒரு சமூகத்தினர் நல்லவர்கள் இருக்கும் போது இறைவன் அவர்களைத் தண்டிக்க மாட்டார், ஆனால் அவர்கள் இறை செய்தியைப் புறக்கணித்து, இணைவைப்பில் விழுந்து, பெற்ற பாடங்களை மறுத்து திருந்த மறுக்கும் போதுதான் இத்தகைய 'புகை' போன்ற கடுமையான தண்டனைகள் நிகழும்.

மெய்ப்பிக்கும் தூதர் சத்தியத்துடன் இவர்களிடம் வந்தார். அவர்களின் இணைவைப்பைக் கைவிடும்படி அவர்களுக்கு அறிவுறுத்தினார். ஆனால் குர்ஆன் கூறுவது போல் "அவர்கள் அவரிடமிருந்து விலகிக் கொண்டனர், மேலும் கூறினர், “நன்கு கல்வி கற்றவர் ஆனால் கிறுக்கர் (44:14) அவர்களுக்கு வரவிருக்கும் தண்டனை குறித்து அவர்களை எச்சரித்த போது அவர்கள் சவால் விட்டனர், நீர் உண்மையானவராக இருந்தால் இந்த வாக்குறுதி எப்போது நிறைவேறும்? கூறும் உங்களுக்குக் குறிப்பிட்ட நாளில், ஒரு குறிப்பிட்ட நேரம் இருக்கிறது. ஒரு மணிநேரம் கூட அதை பிற்படுத்தவோ, முற்படுத்தவோ முடியாது.(34:29 30)

இறுதி நாள் குறித்த செய்திகள் இறைவன்நாடினால்

–ஆர்

(தொடரும்)



# பரிந்துரை ஷஃபாஅத்

அல்குர் ஆன் அல்லாத வேறு ஆதாரங்களை பின்பற்றுவோர் அனைவரும் நம்பும் ஒரு விஷயம் என்னவென்றால் இறைவனிடத்தில் மகான்கள் நமக்காக பரிந்துரை செய்வார்கள் என்பதாகும். கிறித்துவர்கள் யேசு (ஈஸா நபி), பிதாவிடத்தில் தங்களுக்காக பரிந்து பேசுவார் என்று நம்புவது போலவே இன்றைய முஸ்லிம்களும் முஹம்மத் அல்லாஹ்விடத்தில் தங்களுக்காகப் பரிந்துரை செய்வார் என்று நம்புகிறார்கள். 'லா இலாஹ இல்லல்லாஹ்' என்று கூறிவிட்டால் போதும் முஹம்மது நபியின் பரிந்துரை கிட்டும் என்றும், பாங்கு துஆ ஓதினால் நமக்கு ஷஃபாஅத் செய்வது நபியின் மீது கடமையாகிவிடும் என்றும் ஹதீஸ்கள் அவர்களுக்கு வாக்களிக்கின்றன.

பரிந்துரை பற்றிக் குர் ஆன் என்ன கூறுகிறது என்று பார்ப்போம் சூரா 39 (ஸீமர்) 3வது வசனத்தில் அல்லாஹ் கூறுகிறார்.

"அறிந்து கொள்க! மார்க்கம் அல்லாஹ்வுக்கு மட்டுமே ஒருமையுடன் அர்ப்பணிக்கப் பட வேண்டும். இன்னும், அல்லாஹ்வை யன்றிப் பாதுகாவலர் களை எடுத்துக் கொண்டிருப்பவர்கள் கூறுகிறார்கள் "இவர்கள் எங்களை அல்லாஹ்வின் அருகில் சமீபமாகக் கொண்டு செல்வார்கள் என்பதற்காகவே அன்றி நாங்கள் இவர்களை வணங்கவில்லை." அவர்கள் தர்க்கம் செய்து கொள்வது பற்றி அல்லாஹ் தீர்ப்பளிப்பார் அல்லாஹ் இத்தகைய பொய்யர்களை, நிராகரிப்பாளர்களை நேர்வழியில் செலுத்தமாட்டார்.'

மிகத்தெளிவான இவ்வசனம் முஹம்மத் நபி நமக்கு ஷஃபா அத் செய்வார், அல்லாஹ்வின் பால்நம்மை நெருக்கி வைப்பார், என்று நம்புவது தவறு என்றும் அது பொய்யென்றும் அவ்விதம் நம்புவது நிராகரிப்பு என்றும் நமக்குக் கூறுகிறது.

மேலும் 33:38ல் அல்லாஹ் கூறுகிறார் “கூறும் : அல்லாஹ் எனக்கு ஏதேனும் கெடுதியை நாடினால் நீங்கள் அழைக்கும் அல்லாஹ் அல்லாதவை அக்கெடுதியை நீக்கி விட முடியுமா? அல்லது அவர் எனக்கு அருள் செய்ய நாடினால் அந்த அருளை இவை தடுத்து நிறுத்தி விட முடியுமா? கூறும் அல்லாஹ் எனக்குப் போதுமானவர்.

நம்பிக்கை வைப்போர் அவர் மீது மட்டுமே நம்பிக்கை வைக்க வேண்டும்." (பார்க்க 36:23)

அல்லாஹ் கேட்கும் கேள்வி! "அல்லாஹ் தன் அடியாருக்குப் போதுமானவர் அல்லவா?" -39:36

இதன் பின்னரும் இவர்கள் உள்ளம் ஏன் முஹம்மத் நபியின் பரிந்துரையை நாடுகிறது? அல்லாஹ்வை விட முஹம்மத் நபி கருணையுடையவர் என்று எண்ணுகிறார்களா? அல்லது மனிதர்களின் கஷ்ட நிலையை அல்லாஹ் அறியமாட்டார். மனிதர் என்ற முறையில் முஹம்மத் நபி மனிதர்களுடைய கஷ்டங்களை அல்லாஹ்வுக்கு விளக்கிக் கூறுவார், அல்லாஹ் ஏற்றுக்கொள்வார் என்று எண்ணுகிறார்களா! முஹம்மத் நபிக்கு மனிதர்களை நரகிலிருந்து வெளியேற்றும் சக்தியும், சுவனத்திற்கு யார் தகுதியுடையவர்கள் என்ற அறிவும் இருப்பதாக எண்ணுகிறவர்கள் 39:43 ஐப் பார்த்து தெளிவு பெற்றுக்கொள்ளட்டும்.

மேலும் 39:44 ல் "அல்லாஹ் கூறுகிறார் பரிந்துரை அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியது. வானங்கள் பூமியின் ஆட்சி அனைத்தும் அவருக்கே உரியது. அவரிமே நீங்கள் திருப்பப்படுவீர்கள்."

இத்தனை வலிமையான அல்லாஹ்வின் வசனங்களைக் கூறி நினைவூட்டினாலும் இன்றைய முஸ்லிம்கள் இவை அனைத்தும் காஃபிர்களுக்கு உள்ள வசனங்கள் நம்பிக்கையாளர்களுக்கு நிச்சயம் நபியின் ஷஃபாஅத் உண்டு என்பர். ஷஃபாஅத் நிச்சயம் வேண்டும் என்று அழுத்தமாகக் கூறுவர். இத்தகையோருக்காகவே அல்லாஹ் 6:51ல் தெளிவுபடுத்துகிறார்.

"எவர் தன் இறைவன் முன் கொண்டுவரப்படுவது பற்றி அஞ்சுகிறார்களோ அவர்கள் மீட்சி பெறும் பொருட்டு அவர்களுக்கு இவ்வேதத்தைக் கொண்டு நீர் எச்சரிக்கை செய்யும். அவரை (அல்லாஹ்) தவிர பாதுகாப்பாளரோ, பரிந்து பேசுபவரோ அவர்களுக்கு இல்லை . (6:51)

இதன் பின்னரும் ஷஃபாஅத் உண்டு என்பவர்கள் மறுமையில் இறைவன் முன் கொண்டு வரப்படுவதைப் பற்றி அச்சமில்லாமல் இருக்கிறார்கள் என்பதன்றி இதற்கு வேறு என்ன பொருள்?

மேலும் நரகிலிருந்து நம்மை ஈடேற்ற ஷஃபாஅத் உண்டு என்றால் பின்னர் இறைவன் முன் கொண்டுவரப்படுவதைப் பற்றி என்ன அச்சம் இருக்கமுடியும்?

அல்லாஹ் இவ்வளவு தெளிவாக ஷஃபா அத் கிடையாது என்று

நேரடியாகக் கூறியும் "அவருடைய அனுமதியின்றி யார்தான் அவரிடம் பரிந்துரை செய்ய முடியும்?" (2:255) என்ற வசனத்தையும், "அந்நாளில் அர்ரஹ்மான் யாருக்கு அனுமதி அளித்து, யார் அவர் விருப்பத்திற்கு ஒப்ப பேசுகிறார்களோ அவர்களைத் தவிர வேறு எவருடைய பரிந்துரையும் பலனளிக்காது (20:109) என்ற வசனத்தையும்," "(தூதர்களுக்கு) அவர்களுக்கு முன்னால் நடந்ததையும் அவர்களுக்குப் பின்னால் நடப்பதையும் அவர் நன்கறிவார். யாரை அவர் பொருந்தி ஏற்றுக் கொள்வாரோ அவருக்கன்றி அவர்கள் பரிந்து பேசமாட்டார்கள். அவர்களே அவர் மேலுள்ள அச்சத்தால் நடுங்குபவர்களாக இருப்பார்கள் (21:28)" என்ற வசனத்தையும் ஹதீஸ்களுக்காக வாதாடுவோர் எடுத்துக் காண்பிப்பர். எடுத்துக் காட்டிப் பின்னர் அதில் இல்லாத விஷயமான முஹம்மத் நபிக்கு மட்டும் ஷஃபாஅத் உண்டு என்ற விஷயத்தை இவ்வசனங்கள் கூறுவதாகக் கூறி குர் ஆனைப் புரட்டிக் கூடப் பார்த்திராத பாமர முஸ்லிம்களை வழிகெடுப்பார்கள்.

மேலே குறிப்பிட்டுள்ள மூன்று வசனங்களையும் முன் பின் தொடரோடு குர்ஆன் மொழிபெயர்ப்பைப் படிப்பவர்கள் அவ்வசனங்கள் ஷஃபாஅத் இல்லை என்றும், பலனளிக்காது என்றும், அல்லாஹ் நாடியவர் மட்டுமே சுவனம் செல்ல முடியும் என்றும் தெளிவுபடுத்துகிறது என்பதை மெய்யான நம்பிக்கை கொண்டவர்கள் விளங்கிக் கொள்ள முடியும்.

இவ்வசனங்களின் படி சுவனத்தில் நுழைந்த அனைவரும் தத்தம் அன்பிற்குரியவர்களுக்காகப் பரிந்துரை செய்வர் என்றும், அந்த நபர் சுவனத்திற்குத் தகுதி உடையவராக இருப்பின் அவர் சுவனம் நுழைவார் என்றும் நாம் விளங்கிக் கொள்ள முடிகிறது. ஆக ஷஃபாஅத் என்பது மட்டும் நம்மை சுவனத்தில் நுழையச் செய்து விடமுடியாது என்பது நன்கு புலனாகிறது.

இப்றாஹிம் நபி தன் தந்தைக்கு பரிந்துரை செய்ய முடியாது (9:114) நூஹ் நபி தன் மகனுக்கும் மனைவிக்கும் பரிந்துரை செய்ய முடியாது (11:46) முஹம்மது நபி தன் சிறிய தந்தைக்கோ, உறவினர்களுக்கோ பரிந்துரை செய்ய முடியாது (9:80) நிலைமை இவ்வாறு இருக்கும் போது, ஒரு நபியோ, அவ்லியாவோ முன் பின் தெரியாத தனக்காகப் பரிந்துரை செய்வார்கள் என்று எவ்வாறு ஒருவன் எதிர்பார்க்க முடியும்? மேலும் ஷஃபா அத் சம்பந்தமான கீழ்கண்ட குர்ஆனின் வசனங்களையும் பார்க்க வும் (2:48, 123, 6:70, 94, 7:53, 10:3, 19:87, 26:100, 30:13, 32:4, 36:23, 40:18, 43:86, 53:26,74:48.)

அல்லாஹ் குர் ஆனில் இவ்வளவு தெளிவாக ஷஃபா அத் கிடையாது என்றும் பலனளிக்காது என்றும் அறிவித்து விட்ட பின்னர் வேறு ஆதாரங்களை நம்பி பரிந்துரை உண்டு என்பவர்களுக்கு ஒரு வசனம்.

"எவர் தன் இறைவனுடைய வசனங்களைக் கொண்டு உபதேசிக்கப்பட்டும் அவற்றைப் புறக்கணித்து தன்னிரு கரங்களும் செய்த குற்றங்களை மறந்து விடுகிறானோ அவனைவிடப் பெரிய அக்கிரமக்காரன் வேறு யார்? நிச்சயமாக நாம் அவர்களுடைய இருதயங்களின் மீது இதை விளங்கிக் கொள்ளாதவாறு திரைகளையும், அவர்களுடைய செவிகளில் செவிட்டுத்தனத்தையும் , ஏற்படுத்தியிருக்கின்றோம். ஆகவே நீர் அவர்களை நேர்வழியின் பால் அழைத்தாலும் அவர்கள் ஒரு போதும் நேர்வழி அடைய மாட்டார்கள். 18:57)

எனவே மெய்யான நம்பிக்கையாளர்கள், குர் ஆனுக்கு போட்டு வைத்திருக்கும் திரைகளை விலக்கி அல்லாஹ் என்ன கூறுகிறார் என்பதை கவனத்துடன் கேட்டு, குர் ஆனை விளங்கிக் கொள்ள முயற்சிப்போம்.

-ஆர்

# இறைவன் அருளி முஹம்மத் நபி எழுதிய குர்ஆன்

முஹம்மத் நபி தன் கரங்களாலேயே குர் ஆனை எழுதினார். எனவே தான் அல்குர்ஆனின் தனித் தன்மை வாய்ந்த எழுத்தமைப்பை மாற்றும் துணிவு யாருக்கும் ஏற்படவில்லை. அவர்கள் தாங்கள் வசித்த நகரின் பெயர் மக்கா என்று நன்கு அறிந்திருந்தும் 3:96ல் அல்லாஹ் அந்நகரை பக்கா என்று கூறியதை மாற்றும் துணிவு அன்று யாருக்கும் ஏற்படவில்லை. சூராக்கள், (அத்தியாயங்கள்) மற்றும் ஆயத்துக்கள் (வசனங்கள்) ஆகியவற்றின் வரிசை அமைப்பை மாற்றவும் எவரும் துணியவில்லை. குர்ஆனின் தனித்தன்மை வாய்ந்த மொழியையும்,எழுத்தமைப்பையும் (Spellings) யாரும் மாற்ற முடியவில்லை . உதாரணம் : ஸலாத், ஸக்காத், ஹயாத் போன்ற வார்த்தைகளின் எழுத்தமைப்பு, அரபுஇலக்கணப்படிஇவ்வார்த்தை களை எழுதும்போது (வ) இடம்பெறாது. அரபி இலக்கணத்தை மீறிய ஒரு கட்டமைப்பை இறைவன், அவரே செய்திருக்கிறார் என்பதற்கு இது அத்தாட்சிஅல்லவா? இனியேனும் அரபிப் புலமை காட்டுபவர்கள் நிறுத்தி கொள்வார்களா?

# அர்த்தம் அனர்த்தம்

இறைவனும் அவருடைய வானவர்களும் இந்த நபிக்கு உதவியும் ஆதரவும் அளிக்கின்றனர். நம்பிக்கை கொண்டோரே நீங்கள் அவருக்கு உதவியும் ஆதரவும் அளிக்க வேண்டும், மேலும் அவரை எவ்வாறு கண்ணியப்படுத்த வேண்டுமோ அவ்வாறு கண்ணியப்படுத்துங்கள். (33:56)

இன்று பெரும்பாலான முஸ்லிம்களனைவரையும்முஹம்மத் நபியை இறைவனுக்கு இணை வைக்கும் அளவு அழிவுக்கு கொண்டு செல்ல ஷைத்தான் துஷ்பிரயோகப்படுத்திய வசனம் 33:56. இவ்வசனத்தில் வரும் ஸல்லூ அலைஹி' என்ற வாசகத்தின் அர்த்தத்தைத் திரித்து, அதற்கு ஸலவாத்து' என்ற பெயரில் துதிச்சொற்கள் கொண்ட அரபி வாக்கியங்களை ஓதி நபியைத் துதி செய்வது தான் அதற்கு அர்த்தம் என்று ஷைத்தான் பாரம்பர்ய முஸ்லிம்கள் மனத்தில் ஆழமாக பதித்துவிட்டான். இப்போது நாம் இவ்வசனத்திற்கு முதலில் மற்றவர்களின் மொழி பெயர்ப்புக்களைக் காண்போம்.

33:56 Pickthallன் மொழிபெயர்ப்பு

Lo! Allah and His angels shower blessings on the prophet. O ye who belive! <u>Ask blessings</u> on him and salute him with a worthy salutation.

33:56 Yusuf Aliன் மொழிபெயர்ப்பு

Allah and His angels, send blessings on the prophet Oye that believe! send ye blessings on him and salute him with all respect.

33:56ஜான் டிரஸ்ட் மொழிபெயர்ப்பு.

இந்த நபியின் மீது <u>அல்லாஹ் அருள்புரிகிறான்</u>. மலக்குகளும் அவருக்காக <u>அருளைத் தேடுகின்றனர்.</u> முஃமின்களே நீங்களும் அவர் மீது <u>ஸலவாத்துச் சொல்லி</u> அவர்மீது ஸலாமும் சொல்லுங்கள்.

33:56 அப்துல் ஹமீது பாக்கவியின் மொழிபெயர்ப்பு

நிச்சயமாகஅல்லாஹ்வும் அவனுடையமலக்குகளும் நபியின்

மீது<u>ஸலவாத்துச் சொல்லுகின்றனர்.</u> (ஆகவே) விசுவாசிகளே நீங்களும் அவர் மீது <u>ஸலவாத்துச் சொல்லி</u> ஸலாமும் கூறிக் கொண்டிருங்கள்.

33:56 அப்துல் வஹாப், நிஜமுத்தீன் மன்பஈஆகியோரின் மொழிபெயர்ப்பு

நிச்சயமாக அல்லாஹ்வும் மலக்குகளும் நபியின் மீது <u>ஸலவாத்துச் சொல்கின்றனர்.</u> முஃமின்களே! நீங்களும் அவர் மீது <u>ஸலவாத்துச் சொல்லுங்கள்</u> நல்ல முறையில் ஸலாமும் கூறுங்கள்.

மேற்கண்ட வசனத்திற்கு காதியானிகளின் மொழிபெயர்ப்பு

நிச்சயமாக அல்லாஹ் இந்த நபியின் மீது தன் <u>அருளைப் பொழிந்து</u> கொண்டே இருக்கின்றான். மலக்குகளும் இவருக்காகப் <u>பிரார்த்தனை செய்து கொண்டே இருக்கின்றனர்</u>. எனவே நம்பிக்கை கொண்டவர்களே! இந்த நபி (கள் நாயகம் அவர்களுக்கு) க்கு எப்போதும் <u>அருள் பொழியுமாறும்,</u> சாந்தியும் சமாதானமும் கிடைக்குமாறும் நீங்களும் <u>பிரார்த்தனை</u> செய்யுங்கள்.

மேற்கண்ட மொழிப்பெயர்ப்புகள் ஹதீஸ்களின் அடிப்படையில் செய்யப்பட்டவையாகும்.

இறைவன் மனிதர்கள் பேசிக் கொண்டிருக்கக்கூடிய, உயிருள்ள ஒரு மொழியில் தான் இறுதி வேதம் அல்குர் ஆனை இறக்கியிருக்கிறார். அதில் உள்ள வாசகங்களில் இடம்பெறும் வார்த்தைகளுக்கு அரபு மொழியில் என்ன அர்த்தங்களோ அவைதானே அர்த்தங்களாக இருக்க முடியும்.

இவ்வசனத்தில் இரண்டு முறை ஸல்லூ' என்ற அரபிப்பதம் பயன்படுத்தப்படுகிறது. இந்த ஸல்லூ என்ற வார்த்தைக்கு முதல் இடத்தில் ஒரு அர்த்த மும் (ஒருவர் மிகவும் துணிந்து இரண்டு அர்த்தங்களை ஒரே வார்த்தைக்கு கூறுகிறார்!) இரண்டாம் இடத்தில் ஒரு அர்த்தமும் செய்கிறார்கள் அது எப்படி ஒரு வார்த்தைக்கு அகராதியில் இல்லாத பொருளைக் கொடுக்க முடியும்?.

மேலே நாம் வெளியிட்டிருக்கும் மொழிபெயர்ப்புகளில் ஒரு முறை அடிக்கோடிடப்பட்டிருக்கும் இடம் முதல் 'ஸல்லூ' என்ற வார்த்தைக்கு, இரண்டு முறை அடிகோடிடப் பட்டிருக்கும் இடம் இரண்டாவது ஸல்லூ' என்ற வார்த்தைக்கு - ஒரு வார்த்தை , ஒரே வசனத்தில் அதற்கு இரு அர்த்தங்கள்! தடித்த அடிக்கோடு முதல் வார்த்தைக்கு இவர்களின் இரண்டாவது அர்த்தம் ஆச்சர்யமாக
உள்ளதா? ஆச்சர்யப்படாதீர்கள் குர் ஆனை அதன் கருத்துக்களை சிதைக்க வேண்டுமென்றால் அவ்வாறெல்லாம் செய்து தான் ஆகவேண்டும். இவ்வாறெல்லாம் வெளிப்படையாகத் தெரியக்கூடிய தவறுகளையும்

குற்றங்களையும் செய்துதான் குர் ஆனை சிந்திப்பதை விட்டு மக்களை அப்புறப் படுத்தி இருக்கிறார்கள். இவர்கள் சிந்திப்பதை விட்டு விட்டால், இக்குற்றங்களையும் சிந்திக்க மாட்டார்களே!.

'ஸல்லூ' என்ற ஒரு வார்த்தைக்கு இவர்கள் இறைவன் செய்யும் போது 'அருள் செய்கிறார்' என்றும், நம்பிக்கை கொண்டவர்கள் செய்யும்போது ஸலவாத்து' என்ற பிரார்த்தனை என்றும் இருவிதமாக மொழி பெயர்த்திருக்கிறார்களே உண்மையில் அரபு மொழியில் ஸல்லூ' என்ற பதத்திற்கு என்ன அர்த்தம்?

ஸல்லூ என்ற வினைச் சொல்லின் மூலம் வஸல' என்ற வார்த்தையாகும். இவ்வார்த்தைக்குத் தொடர்பு கொள்ளுதல், ஆதரவு அளித்தல் என்பதே அர்த்தம் ஆகும். இதை வாசகர்கள் எந்த ஒரு அரபி அகராதியிலும் காணலாம். இவ்வாறிருந்தும் இவர்கள் அனைவரும் ஸல்லூ என்ற பதத்திற்கு ஸலவாத்து என்ற பிரார்த்தனை ஓதுவது' என்று மொழிபெயர்க்கக் காரணம் யார்?

இக்கேள்விக்கு பதிலாக, இந்த ஸலவாத்து என்ற பிரார்த்தனை என்ன விளைவுகளை ஏற்படுத்தி இருக்கிறது என்பதைக் கவனித்தால் இதற்கு யார் காரணமாக இருந்திருக்க முடியும் என்பது நமக்கு விளங்கி விடும்.

இந்த ஸலவாத்து என்ற பிரார்த்தனையை எல்லா அன்றாட அலுவல்களிலும் பயன்படுத்து கிறார்கள். எப்பொழுதெல்லாம் இறைவனை நினைக்கிறார்களோ அப்பொழுது எல்லாம் இவர்கள் 'ஸலவாத்து' என்ற பெயரில் நபியையும் இணை(வை)த்து நினைக்கின்றார்கள். இந்த 'ஸலவாத்து'என்ற பிரார்த்தனையின் ஒரு விரிவாக்கமே மௌலூது' என்ற முஹம்மத் நபியின் மேல் துதிச் சொற்கள் நிறைந்த, அவரை இறைவனுக்கு இணை யானவர், துணையானவர் என்ற அந்தஸ்திற்கு உயர்த்துகின்ற ஒரு துதிப்புத்தகம் ஆகும். (இதுவே பின்னர் மற்ற நல்லவர்களுக்கும் விரிவாக்கப்பட்டது).

முஸ்லிம்களில் ஒரு சிறு பிரிவினர் மௌலூது தவறு என்று உணர்ந்தாலும் ஸலவாத்து ஒரு சின்ன மௌலூதுதான் என்பதை உணர்வதில்லை. முஸ்லிம்களைப் பொறுத்தவரை இறைவன் குர்ஆனில் கூறும் நன்மையான செயல்களை எல்லாம் செய்தால் நல்லதுதான், ஆனால் செய்யாவிட்டாலும் பரவாயில்லை , ஸலவாத்து ஓதிக் கொண்டிருந்தால் போதும், அதுவே நமக்கு எல்லா நன்மைகளையும் பெற்றுத் தந்து விடும். அது மட்டுமல்ல இதன் மூலம் நம் பாவங்களும் மன்னிக்கப்பட்டு விடும்! யார் முஹம்மத் நபியின் மீது ஸலவாத்து ஓதுகிறாரோ அவரை நரகிலிருந்து

வெளியேற்றுவது முஹம்மத் நபியின் மீது கடமை என்று ஹதீஸ்கள் சித்தரிக்கின்றன. 'எல்லா நேரங்களிலும் உங்கள் மீது ஸலவாத்து ஓதிக் கொண்டிருக்கவா' என்றொரு நபித்தோழர் (மிகவும் அறிவுள்ள நபித் தோழர்!) கேட்டாராம். அதற்கு செய்! அதுவே உன் தேவைகளைப் பெற்றுத் தந்து விடும் என்றாராம் முஹம்மத் நபி! (ஸஹீஹான ஹதீஸ்) நபி இவ்வாறு கூறியிருப்பாரா? குர்ஆன் கூறுவதைப் பார்போமா?

"இறைவனால் வேதமும் ஞானமும், நபித்துவம் அருள் செய்யப்பட்ட ஒரு மனிதர் இறைவனுடன் என்னையும் இணையாக்குங்கள் என்று ஒரு போதும் கூறமாட்டார். மாறாக, நீங்கள் பிரசாரம் செய்யும் வேதத்தின் படியும், நீங்கள் கற்றுக் கொள்ளும் பாடங்களின் படியும் உங்கள் இரட்சகருக்குமட்டுமே அர்ப்பணித்தவர்களாக இருங்கள் என்றே அவர் கூறுவார் (3:79)

மேற்கண்ட இறைவசனத்தில் இருந்து ஒரு போதும் அன்றாடம் தன்மீது ஸலவாத்து ஓதிக் கொண்டிருக்கும்படி நிச்சயம் கூறியிருக்க மாட்டார்கள் என்பதை மிகத் தெளிவாக ,அறிந்து கொள்கிறோம் கொள்கிறோம்.

மேலும் இறைவனை மட்டுமே நினைவு கூற, அழைக்க வேண்டிய அன்றாடத் தொடர்பு தொழுகையில் கூட அத்தஹிய்யாத்து என்ற பெயரில் அஸ்ஸலாமு அலைக்க அய்யுஹன் நபிய்யு' (நபியே உம்மீது சாந்தி உண்டாவதாக) என்று முன்னிலைச் சொல்லால் முஹம்மத் நபியை அழைத்து அவரை இறைவனுடன் இணையாக்குகிறார்கள். தொழுகையில் ஒரு குறிப்பிட்ட நேரத்தை ஸலவாத்து ஓதுவதிலேயே கழித்து விடுகிறார்கள்.

தேவையான அனைத்துடனும், மிகமிகச் சிறிய விவரங்களையும் குர்ஆனில் கூறியிருக்கும் இறைவன் இந்த அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக இவர்கள் கருதும் இந்த ஸலவாத்தை ஏன் குர்ஆனில் நமக்குக் கூறவில்லை? முஸ்லிம்கள் சிந்திக்க வேண்டாமா? இந்த 'ஸலவாத்து' குர் ஆனில் இல்லாதது என்பதாவது அவர்களுக்குத் தெரியுமா? இவர்கள் முஹம்மத் நபியை நினைக்காமல் இறைவனை நினைப்பதில்லை. ஆனால் உங்கள் இறைவனை ஒருமையுடன் வணங்குங்கள். இவருக்கு மட்டுமே உங்களை அர்ப்பணித்துக் கொள்ளுங்கள்'. என்பதே முஹம்மத் நபியின் முக்கியச் செய்தியாக இருந்தது!.

குர்ஆனில் அடிப்படைக் கருத்துக்களில் இந்த அளவு முரண்பட்டு நிற்கும் ஸலவாத்திற்கு யார் காரணம் என்பது இப்போது சிந்தித்தால் நமக்கு நன்கு விளங்கும். அது மனிதர்களை இறைச் செய்தியை விட்டுத் தடுக்கவும் அதற்கு மாறு செய்யவும் ஏவும் ஷைத்தானையன்றி வேறு யாராக இருக்க முடியும்? இறைவனுக்கு முஹம்மத் நபியை இணையாக்கும் இந்த ஸலவாத்து'

என்னும்மாபெரும் குற்றச்செயலைச் செய்ய ஹதீஸ்கள் ஏவுகின்றன. இப்படிப்பட்ட ஹதீஸ்களின் அடிப்படையில் செய்யப்பட்ட மொழி பெயர்ப்புகளில் இருந்து எவ்வாறு நாம் குர் ஆனின் உண்மையான செய்தியைப் புரிந்து கொள்ள முடியும்? இப்போது நாம் மேற்கண்ட வசனத்திற்கு மெய்ப்பிக்கும் தூதரின் சரியான ஆங்கில மொழிப்பெயர்ப்பைக் காண்போம்.

33:56. God and his Angels help and support the prophet. O you who believe you shall help and support him and regard him as he should be regarded. அதன் தமிழாக்கம்.

33:56 வசனத்தின் சரியான தமிழ் மொழிபெயர்ப்பு

இறைவனும் அவருடைய வானவர்களும் இந்த நபிக்கு உதவியும் ஆதரவும் அளிக்கின்றனர். நம்பிக்கை கொண்டோரே நீங்கள் அவருக்கு உதவியும் ஆதரவும் அளிக்க வேண்டும், மேலும் அவரை எவ்வாறு கண்ணியப்படுத்த வேண்டுமோ அவ்வாறு கண்ணியப்படுத்துங்கள். (33:56)

குர்ஆனை நாம் முழுமையாக நம்பவும் ஏற்றுக் கொள்ளவும் வேண்டும். அதன் ஒரு பகுதியை நம்பி மற்றொரு பகுதியை மறுப்பது இவ்வுலகில் இழிவையும் மறுமையில் கடும் தண்டைனையையும் பெற்றுத் தரும் குற்றச் செயல் என்று இறைவன் தெளிவாகக் கூறுகிறார். (2:85)

அதுபோல குர்ஆனில் எந்த முரண்பாடுகளும் இல்லை என்று இறைவன் கூறுகிறார். எனவே குர் ஆனின் வசனங்களுக்கு மற்ற வசனங்களை நாம் விளக்கமாகக் கருத வேண்டுமே தவிர முரண்பாடாகக் கருதக் கூடாது. ஓரிறைக் கொள்கையை வலியுறுத்திச் சொல்லும் குர்ஆன் ஒரு போதும் நம்மை நபியைத் துதி செய்து கொண்டிருக்குமாறு கூறவில்லை என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

அந்த அடிப்படையில் நாம் சிந்திக்கும் போது, மற்ற மொழிபெயர்ப்புக்கள் குர் ஆனுடைய அடிப்படைக் கருத்துடன் எந்த அளவு முரண்பட்டு நிற்கின்றன என்பதை, எந்த ஒரு சிதைக்கப்பட்ட மொழிபெயர்ப்பாக இருந்தாலும் சரி,அதை முழுமையாக ஒரு முறை படித்தவர்கள் கூட விளங்கிக் கொள்ள முடியும்.

அதே சமயம் மெய்ப்பிக்கும் தூதரின் மொழிபெயர்ப்பையும் நாம் ஒப்பிட்டு சிந்தித்தால் இறைவன் உண்மையில் 33:56ல் நம்பிக்கையாளர்களுக்கு என்ன கூறுகிறார் என்பதை நாம் விளங்கிக் கொள்ள முடியும். ஏனெனில் சிந்திப்பவர்கட்கு மட்டுமே இறைவனின் வார்த்தைகளான அல்குர்ஆன் வழிகாட்டும், புரியும் என்று இறைவன் கூறுகிறார். - ஆர்

# இறைவனை நிந்திக்கும் அபூஅப்தில்லாஹ்வின் எழுத்துக்கள்.

அல்குர்ஆன் மட்டுமே மார்க்க ஆதாரம் என்ற சத்தியப் பிரசாரத்தை வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு எதிர்க்கும் இஸ்லாமிய அறிஞர்கள் தங்கள் நிதானத்தை முற்றிலும் இழந்து விட்டனர் என்பதையே அவர்களின் சமீபகால பேச்சு, நடவடிக்கை, மற்றும் எழுத்துக்கள் சுட்டிக்காட்டுகின்றன.

ஆரம்பத்தில் குர்ஆன் மட்டும் மார்க்க ஆதாரம் என்பது வழிகேடு என்றனர். பின்னர் இவர்கள் காஃபிர்கள், இவர்களுடன் திருமண உறவு கூடாது, இவர்கள் வாரிசுகள் ஆக மாட்டார்கள், கப்ரில் இடம் கிடையாது, புதைத்தாலும் தோண்டி எடுத்து விட வேண்டும் என்றெல்லாம் வன்முறையை தூண்டி, மக்களை இந்த சத்தியப் பிரசாரத்தைக் கேட்க விடாமல் தடுக்க முயன்றார்கள்.

இப்போது தொடர்ந்து, ஹதீஸ்களை ஆதரிப்பதற்காக குர்ஆனையும், இறைவனையும் குறை சொல்லவும் துணிந்து விட்டனர்.

துவக்கத்தில் நாம் வெளியிட்ட அல்குர்ஆன் மட்டுமே' என்ற பிரசுரத்திற்குப் பதில் எழுதுகிறேன் என்று தன் அந்நஜாத் இதழில் ஆரம்பித்த அதன் ஆசிரியர் அபூ அப்தில்லா நான்கு மாத இதழ்கள்வரை ஊர்க்கதை, உலகக்கதை, காரிஜிய்யாக்கள் கதை ஆகியவற்றை எழுதிவிட்டு அடுத்த (5வது) இதழில் நமது பிரசுரத்தில் எழுப்பப்பட்டுள்ள கேள்விகளுக்குப் பதிலளிப்பதாகக் கூறி இருந்தார். பின் அதை அப்படியே மூச்சுக்காட்டாமல் விட்டு விட்டு அந்தத் தொடரைபே நிறுத்திவிட்டார். நிறுத்தப்பட்டது ஏன் என்ற குறிப்பும் கூட அதில் இல்லை. அப்படி ஒரு தொடரை ஆரம்பிக்காதது போலவே நடந்து கொண்டார். பல மாதங்கள் கழித்து, இப்போது மீண்டும் ஹெல்த் டைம் டாக்டர்களுக்குப் பதில் அளிக்கிறேன் பேர்வழி என்று கிளம்பி இருக்கின்றார். அதில் தேவையில்லாமல் புதிய நினைவூட்டலையும் வம்புக்கிழுத்திருக்கிறார். அதில் சாரம் ஒன்றும் இல்லையென்றாலும் தன்னுடைய நாரதர் வேலையை மட்டும் சிறப்பாகச் செய்துள்ளார்.

சத்தியத்தை இரு நிலைகளில் புரிந்து கொண்டு செயல்படுத்தி வரும் சகோதரர்களிடம் அவர்களிடமுள்ள சிற்சில கருத்து வேறுபாடுகளைப் பெரிது படுத்தி பிரித்தாளும் சூழ்ச்சியைப் பயன்படுத்தி உள்ளார். குர்ஆன் மட்டுமே மார்க்க ஆதாரம் என்று மெய்யாகவே நம்பி ஏற்றுக் கொண்ட சகோதரர்கள் அனைவரும் நிச்சயமாகத் தங்கள் கருத்து வேறுபாடுகளைக் களைந்து ஓரிடத்தில், ஒரு நிலையில் ஒன்று சேர்வார்கள். ஏனெனில் மெய்யாகவே நம்பிக்கை கொண்டவர்கள் அனைவரையும் ஒன்று சேர்ப்பதாக இறைவன் வாக்களிக்கிறார்.

இதை அறியாமல் வீண்முயற்சி செய்யும் அபூ அப்தில்லா தோற்கப்போவது நிச்சயம்.ஆனால் அவர் செய்த மிகப்பெரிய குற்றம் இதுவல்ல. இறைவனின் மீதும் குர்ஆனின் மீதும் பழி கூறியதுதான். ஹதீஸ்கள் செவி வழிச் செய்திகள் தான், எனவே அவை நம்பத்தகுந்ததல்ல என்றால் குர்ஆனும் செவிவழிச் செய்திதான்.

(47ஆம் பக்கம் பார்க்க)

**Sura 2: The Heifet (Al-Baqarah)**

ثم اَنتم هؤُلاءِ تَقْتُلُوْنَ اَنفُسَكُمْ وَتخرِجُوْنَ فَرِيْقًا مِّنكُمْ مِّنْ دِيَارِهِمْ تَظٰهَرُوْنَ عَلَيهِمْ بِالاِثْمِ وَالْعُدْوَانِ وَاِنْ يَّاْتُوْكُمْ اُسرى تُفٰدُوْهم وَهوَ محرَّمٌ عَلَيْكُمْ اِخرَاجُهُمْ اَفَتُؤْمِنُوْنَ بِبَعْضِ الْكِتٰبِ وَتَكْفُرُوْنَ بِبَعْضٍ فَمَا جَزَآءُ مَنْ يَّفْعَلُ ذٰلِكَ مِنكُمْ اِلا خِزْىٌ فِى الْحَيٰوةِ الدُّنْيَا وَيَوْمَ الْقِيمَةِ يُرَدُّوْنَ اِلٰى اَشَدِّ الْعَذَابِ وَمَا الله بِغَافِلٍ عما تَعْمَلُوْنَ

85. Yet, here you are killing each other, and evicting some of you from their homes, banding against them sin fully and maliciously. Even when they surrendered, you demanded ransom from them. Evicting them was prohibited for you in the first place. Do you believe in part of the scripture and disbelieve in part? What should be the retribution for those among you who do this, except humiliation in this life, and a far worse retribution on the Day of Resurrection? God is never unaware of anything you do.

**அத்தியாயம் - 2 : பசுங்கன்று (அல்பகறா)**

85. இருப்பினும், இப்போது நீங்கள் ஒருவரை யொருவர் கொலை செய்து கொண்டிருக் கின்றீர்கள், மேலும் அவர்களுக்கு எதிராகப் பாவகரமாகவும் குரோதத்துடனும், ஒன்று சேர்ந்து கொண்டு, உங்களில் சிலரை அவர்க ளுடைய வீடுகளில் இருந்து வெளியேற்று கின்றீர்கள். அவர்கள் சரண்புகுந்த போதிலும், அவர்களிடமிருந்து நீங்கள் ஈடு கோரினீர்கள். முதலில் அவர்களை வெளியேற்றுவதே உங்களுக்குத் தடுக்கப்பட்டிருந்தது. வேதத்தின் பகுதியை, நீங்கள் நம்பிக்கை கொண்டு விட்டு பகுதியை நம்பமறுக்கின்றீர்களா? உங்களில் இதனைச் செய்கின்றவர்களுக்கு, இவ்வாழ் வினில் இழிவையும் மேலும் உயிர்த்தெழுப் பப்படும் நாளன்று மிகவும் மோசமான தண்டனையையும் விட, வேறென்ன தண்டனை இருக்க முடியும்? நீங்கள் செய்கின்ற எந்த ஒன்றையும் கடவுள் ஒரு போதும் அறியாதவர் அல்லர்.

اُولٰٓئِكَ الَّذِيْنَ اشْتَرَوُا الْحَيٰوةَ الدُّنْيَا بِالْاٰخِرَةِ فَلَا يُخَفَّفُ عَنْهُمُ الْعَذَابُ وَلَا هُمْ يُنْصَرُوْنَ

86. It is they who bought this lowly life at the expense of the Hereafter. Consequently, the retribution is never commuted for them, nor can they be helped.

86. அவர்கள்தான் மறுவுலகை விலையாகக் கொடுத்து இந்தக் கீழான வாழ்வை வாங்கிக் கொண்டவர்கள். அதன் விளை வாக, தண்டனையானது அவர்களுக்கு ஒருபோதும் குறைக்கப்பட மாட்டாது, அன்றி அவர்கள் உதவி செய்யப்பட்டவர் களாகவும் இருக்க இயலாது.

### *The Prophets of Israel*

**இஸ்வேலர்களின் நபிமார்கள் (வேதகர்கள்)**

اُولٰٓئِكَ الَّذِيْنَ اشْتَرَوُا الْحَيٰوةَ الدُّنْيَا بِالْاٰخِرَةِ فَلَا يُخَفَّفُ عَنْهُمُ الْعَذَابُ وَلَا هُمْ يُنْصَرُوْنَ

87. We gave Moses the scripture, and subsequent to him we sent other

87. மோஸஸுக்கு நாம் வேதத்தைக் கொடுத்தோம், மேலும் அவருக்குப் பின்னர் மற்றத் தூதர்களை

messengers, and we gave Jesus, son of Mary, profound miracles and supported him with the Holy Spirit. Is it not a fact that every time a messenger went to you with anything you disliked, your ego caused you to be arrogant? Some of them you rejected, and some of them you killed.

நாம் அனுப்பினோம், மேலும் மேரியின் மகனான, ஜீஸஸுக்கு, நாம் ஆழ்ந்த அற்புதங்களைத் தந்தோம் அத்துடன் பரிசுத்த ஆவியைக் கொண்டு அவருக்கு ஆதரவளித்தோம். நீங்கள் விரும்பாத எதையேனும் கொண்டு உங்களிடம் ஒரு தூதர் வந்த ஒவ்வொரு முறையும், உங்களுடைய அகந்தை யானது நீங்கள் ஆணவம் கொண்டவர்களாக இருக்கக் காரணமானது என்பது ஒரு நிதர்சன மல்லவா? அவர்களில் சிலரை நீங்கள் ஏற்கமறுத் தீர்கள், மேலும் அவர்களில் சிலரை நீங்கள் கொன்று விட்டீர்கள்.

وَقَالُوْا قُلُوْبُنَا غُلْفٌ بَل لَّعَنَهُمُ اللّٰهُ بِكُفْرِهِمْ فَقَلِيْلًا مَّا يُؤْمِنُوْنَ

**Tragic Statement:**
**"My mind is made up"!**

88. Some would say, "Our minds are made up!" Instead, it is a curse from God, as a consequence of their disbelief, that keeps them from believing, except for a few of them.

**துக்கமான வாக்குமூலம்**
**"என் மனம் முடிவெடுத்து விட்டது"**

88. சிலர் கூறக்கூடும், எங்களுடைய மனங்கள் முடிவெடுத் துவிட்டன! மாறாக, அவர்களுடைய நம்பமறுத்தலின் ஒரு விளைவாக, அது கடவுள்-யிடமிருந்து ஒரு சாபமாகும், அவர்களில் ஒரு சிலரைத் தவிர, நம்பிக்கை கொள்வதி லிருந்து அவர்களை அது தடுக்கின்றது.

وَلَمَّا جَآءَهُمْ كِتٰبٌ مِّنْ عِنْدِ اللّٰهِ مُصَدِّقٌ لِّمَا مَعَهُمْۙ وَكَانُوْا مِنْ قَبْلُ يَسْتَفْتِحُوْنَ عَلَى الَّذِيْنَ كَفَرُوْا فَلَمَّا جَآءَهُمْ مَّا عَرَفُوْا كَفَرُوْا بِهٖ فَلَعْنَةُ اللّٰهِ عَلَى الْكٰفِرِيْنَ

***The Quran***
***Cnsummate All Scriptures***

89. When this scripture came to them from God, and even though it agrees with, and confirms what they have, and even though they used to prophesy its advent when they talked with the disbelievers, when their own prophecy came to pass, they disbelieved therein. God's condem nation thus afflicts the disbelievers.

**குர்ஆன் எல்லா வேதங்களையும்**
**முழுமைப்படுத்துகிறது.**

89. கடவுள்-யிடமிருந்து இந்த வேதம் அவர்களிடம் வந்த போது, அது அவர்களிடம் உள்ளதோடு ஒத்துப் போவதாகவும், உறுதிப்படுத்துவதாகவும் இருந்த போதிலும், மேலும் நம்ப மறுப்பவர்களுடன் அவர்கள் உரையாடுகையில் அதன் வருகையைப் பற்றி முன்னறிவிப்பவர்களாக அவர்கள் இருந்த போதிலும், அவர்களுடைய சொந்த முன்னறிவிப்பு நிகழ்ந்தேறிய பொழுது, அதில் அவர்கள் நம்பிக்கை கொள்ள மறுத்தனர். கடவுள்-ன் கண்டனமானது இவ்விதமாக நம்பமறுப்பவர்களை வருத்துகின்றது.

بِئْسَمَا اشْتَرَوْا بِهٖ اَنْفُسَهُمْ اَنْ يَّكْفُرُوْا بِمَآ اَنْزَلَ اللّٰهُ
بَغْيًا اَنْ يُّنَزِّلَ اللّٰهُ مِنْ فَضْلِهٖ عَلٰى مَنْ يَّشَآءُ مِنْ عِبَادِهٖ
فَبَآءُوْ بِغَضَبٍ عَلٰى غَضَبٍ وَلِلْكٰفِرِيْنَ عَذَابٌ مُّهِيْنٌ

90. Miserable indeed is what they sold their souls for - rejecting these revelations of God out of sheer resentment that God should bestow His grace upon whomever He chooses from among His servants. Consequently, they incurred wrath upon wrath. The disbelievers have incurred a humiliating retribution.

90. தன்னுடைய ஊழியர்களில் இருந்து அவர் தேர்ந்தெடுக் கின்ற எவர் மீதும் தன் அருட்கொடையை கடவுள் அருள் கின்றார் என்பதால் கடும் ஆத்திரம் கொண்டு, கடவுள்-ன் இந்த வெளிப்பாடுகளை ஏற்கமறுத்து- எதற்காகத் தங்க ளுடைய ஆத்மாக்களை அவர்கள் விற்பனை செய்தார்களோ அது உண்மையில் மிகவும் துக்ககரமானது. அதன் விளைவாக, அவர்கள் கோபத்தின் மேல் கோபத்திற்கு உள்ளானார்கள். நம்ப மறுப்பவர்கள் இழிவுபடுத்துகின்றதொரு தண்டனைக்கு உள்ளாகி விட்டார்கள்.

وَاِذَا قِيْلَ لَهُمْ اٰمِنُوْا بِمَآ اَنْزَلَ اللّٰهُ قَالُوْا نُؤْمِنُ بِمَآ اُنْزِلَ
عَلَيْنَا وَيَكْفُرُوْنَ بِمَا وَرَآءَهٗ وَهُوَ الْحَقُّ مُصَدِّقًا لِّمَا مَعَهُمْ
قُلْ فَلِمَ تَقْتُلُوْنَ اَنْبِيَآءَ اللّٰهِ مِنْ قَبْلُ اِنْ كُنْتُمْ مُّؤْمِنِيْنَ

91. When they are told, "You shall believe in these revelations of God," they say, "We believe only in what was sent down to us." Thus, they disbelieve in subsequent revelations, even if it is the truth from their Lord, and even though it confirms what they have! Say, "Why then did you kill God's prophets, if you were believers?"

91. கடவுள்-ன் இந்த வெளிப்பாடுகள் மீது நீங்கள் நம்பிக்கை கொள்ள வேண்டும்,என அவர்களிடம் கூறப்பட்டால், அவர்கள் கூறுகின்றனர், எங்களுக்கு இறக்கி அனுப்பப்பட்டவற்றின் மீது மட்டுமே நாங்கள் நம்பிக்கை கொள்கின்றோம். இவ்விதமாக, அது அவர்களுடைய இரட்சகரிடமிருந்து வந்த சத்தியமாக இருந் தாலும், மேலும் அவர்களிடம் உள்ளதை உறுதிப்படுத்துவதாக அது இருந்த போதிலும், தொடர்ந்த வெளிப்பாடுகளின் மீது அவர்கள் நம்பிக்கை கொள்ள மறுக்கின்றனர்! கூறுவீராக நீங்கள் நம்பிக்கை யாளர்களாக இருந்திருந்தால், பின்னர் ஏன் நீங்கள் கடவுள்-ன் நபிமார்களைக் கொன்றீர்கள்?

### *Learning From Israel's History*

### இஸ்ரவேலர்களின் சரித்திரத்திலிருந்து பாடங்களை படித்தல்.

وَلَقَدْ جَآءَكُمْ مُّوْسٰى بِالْبَيِّنٰتِ ثُمَّ اتَّخَذْتُمُ الْعِجْلَ مِنْ
بَعْدِهٖ وَاَنْتُمْ ظٰلِمُوْنَ

92. Moses went to you with profound miracles, yet you worshiped the calf in his absence, and you turned wicked.

92. ஆழ்ந்த அற்புதங்களுடன் மோஸஸ் உங்களிடம் வந்தார், இருப் பினும் அவர் இல்லாத போது கன்றுக் குட் டியை நீங்கள் வழிபட்டீர்கள், மேலும் நீங்கள் தீயவர்களாக மாறி விட்டீர்கள்.

وَاِذْ اَخَذْنَا مِيْثَاقَكُمْ وَرَفَعْنَا فَوْقَكُمُ الطُّوْرَ
خُذُوْا مَآ اٰتَيْنٰكُمْ بِقُوَّةٍ وَّاسْمَعُوْا
قَالُوْا سَمِعْنَا وَعَصَيْنَا وَاُشْرِبُوْا فِىْ
قُلُوْبِهِمُ الْعِجْلَ بِكُفْرِهِمْ قُلْ بِئْسَمَا يَاْمُرُ
كُمْ بِهٖٓ اِيْمَانُكُمْ اِنْ كُنْتُمْ مُّؤْمِنِيْنَ

93. We made a covenant with you, as we raised Mount Sinai above you, saying, "You shall uphold the commandments we have given you, strongly, and listen." They said, "We hear, but we disobey." Their hearts became filled with adoration for the calf, due to their disbelief. Say, "Miserable indeed is what your faith dictates upon you, if you do have any faith."

93. ஸினாய் மலையை உங்களுக்கு மேலாக நாம் உயர்த்தியவாறு, நாம் உங்களுக்குக் கொடுத்த கட்டளைகளை நீங்கள் பலமாக ஆதரிக்கவும், கவனமாகச் செவியேற்கவும் வேண்டும், என்று கூறியவாறாக, உங்களுடன் நாம் ஓர் உடன்படிக்கை செய்தோம். அவர்கள் கூறினர், நாங்கள் செவியேற் கின்றோம், ஆனால் நாங்கள் கீழ்ப்படிய மறுக்கின்றோம். அவர்களுடைய நம்பமறுத்தலின் காரணத்தால், கன்றுக் குட்டியின் மீதான பக்தியைக் கொண்டு அவர்களுடைய இதயங்கள் நிறைந்து விட்டிருந்தது. கூறுவீராக, உங்களிடம் விசுவாசம் ஏதேனும் இருக்குமாயின், உங்களுடைய விசுவாசம் எதனை உங்களுக்குக் கட்டளையிடுகின்றதோ அது உண்மையில் துன்பகரமானதாகும்.

قُلْ اِنْ كَانَتْ لَكُمُ الدَّارُ الْاٰخِرَةُ عِنْدَ اللّٰهِ خَالِصَةً مِّنْ دُوْنِ النَّاسِ فَتَمَنَّوُا الْمَوْتَ اِنْ كُنْتُمْ صٰدِقِيْنَ

94. Say, "If the abode of the Hereafter is reserved for you at God, to the exclusion of all other people, then you should long for death, if you are truthful."

94. கூறுவீராக, மற்ற மக்கள் அனைவரையும் தவிர்த்து விட்டு, மறுவுலகின் தங்குமிடமானது கடவுள்-யிடம் உங்களுக்கென ஒதுக்கி வைக்கப்பட்டிருக்குமாயின், பின்னர் நீங்கள் உண்மை யாளர்களாக இருந்தால், நீங்கள் மரணத்திற்காக ஏங்க வேண்டும்.

وَ لَنْ يَّتَمَنَّوْهُ اَبَدًا بِمَا قَدَّمَتْ اَيْدِيْهِمْ وَاللّٰهُ عَلِيْمٌ بِالظّٰلِمِيْنَ

95. They never long for it, because of what their hands have sent forth. God is fully aware of the wicked.

95. அவர்களுடைய கரங்கள் முற்படுத்தி அனுப்பியவற்றின் காரணத்தால், அவர்கள் ஒருபோதும் அதற்காக ஏங்குவதில்லை. தீயவர்களைக் கடவுள் முற்றிலும் அறிந்தவராக இருக்கின்றார்.

وَلَتَجِدَنَّهُمْ اَحْرَصَ النَّاسِ عَلٰى حَيٰوةٍ ۚ وَ مِنَ الَّذِيْنَ اَشْرَكُوْا ۚ يَوَدُّ اَحَدُهُمْ لَوْ يُعَمَّرُ اَ لْفَ سَنَةٍ وَمَا هُوَ بِمُزَحْزِحِهٖ مِنَ الْعَذَابِ اَنْ يُّعَمَّرَ وَاللّٰهُ بَصِيْرٌ بِمَا يَعْمَلُوْنَ

96. In fact, you will find them the most covetous of life; even more so than the idol worshipers. The one of them wishes to live a thousand years. But this will not spare him any retribution, no matter how long he lives. God is seer of everything they do.

96. உண்மையில், வாழ்வின் மீது மிகவும் பேராவல் கொண்டவர்களாக அவர் களை நீர் காண்பீர்; போலித் தெய்வ வழிபாடு செய்பவர்களை விடவும், இன்னும் மிகவும் அதிகமாக. அவர்களில் ஒவ்வொருவனும் ஓராயிரம் ஆண்டுகள் வாழ்வதற்கு விரும்புகின்றான். ஆனால் இது அவனை எந்தத் தண்டனையிலிருந்தும் தவிர்த்து விடாது, அவன் எவ்வளவு நீண்ட காலம் வாழ்கின்றான் என்பது பொருட்டல்ல. அவர்கள் செய்கின்ற ஒவ்வொன் றையும் கடவுள் பார்ப்பவராக இருக்கின்றார்.

***Garriel Mediates Revelaion***

**வேத வெளிப்பாட்டில் ஜிப்ரீலின் பங்கு**

قُلْ مَنْ كَانَ عَدُوًّا لِّجِبْرِيْلَ فَاِنَّهٗ نَزَّلَهٗ عَلٰى قَلْبِكَ بِاِذْنِ اللّٰهِ مُصَدِّقًا لِّمَا بَيْنَ يَدَيْهِ وَهُدًى وَّبُشْرٰى لِلْمُؤْمِنِيْنَ

97. Say, "Anyone who opposes Gabriel should know that he has brought down this (Quran) into your heart, in accordance with God's will, confirming previous scriptures, and providing guidance and good news for the believers."

97. கூறுவீராக,கேப்ரியேலை எதிர்க்கின்ற எவரொருவரும், அவர்தான் கடவுள்-ன் நாட்டத்திற்கேற்ப முந்திய வேதங்களை உறுதிப்படுத்துகின்றதாகவும், மேலும் நம்பிக்கையாளர்களுக்கு வழிகாட்டலையும் நற்செய்தியையும் வழங்குகின்ற தாகவும், உம்முடைய இதயத்திற்குள் இதனை (குர்ஆனை) கீழே கொண்டு வந்தார் என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

# குர்ஆன் மட்டும் போதாதா?

அல்முபீன் அடுத்த கேள்வி

அவன் தான் இவ்வேதத்தை உம்மீது இறக்கினான். அதிலே (விளக்கமான) வசனங்கள் உள்ளன. மற்றவை முதஷாபிஹாத் ஆகும்.(3:7)

இவற்றில் விளக்கமான வசனங்கள் எவை? முதஷாபிஹாத் வசனங்கள் எவை?

குர்ஆன் மனிதர்கள் நேர்வழி அடைய வேண்டும் என்பதற்காக இறைவனால் அருளப்பட்ட வேதம். அவ்வேதம் எப்படிப்பட்டது, அதை எப்படி அணுகவேண்டும் என்பதற்கு இறைவன் குர் ஆனில் நல்லவர்கட்கு வழிகாட்டுகிறார். அத்தகைய ஒரு வசனம் தான் இவர்கள் மேலே குறிப்பிட்டிருக்கும் 3:7 எண்ணிட்ட வசனம் ஆகும்.

ஆயினும் அவர்கள் அவ்வசனத்தின் முதற்பகுதியை மட்டும் வெளியிட்டு விட்டு அதில் ஒரு கேள்வியும் கேட்டிருக்கிறார்கள். நாம் இங்கே அவ்வசனத்தை முழுமையாகப் பார்ப்போம்.

அவர்தான் இவ்வேதத்தை உம்மீது இறக்கினார், அதில் நேரடியான வசனங்கள் உள்ளன - அவையே இவ்வேதத்தின் சாரமாகும் - மேலும் பன்முக அர்த்தங்கள் தரும் அல்லது உவமானங்கள் கூறும் வசனங்களும் உள்ளன. எவர்கள் தங்கள் இதயங்களில் அவநம்பிக்கையைத் தாங்கி இருக்கிறார்களோ அவர்கள் குழப்பத்தை உருவாக்கவும், குறிப்பான ஒரு அர்த்தத்தை வெளிக்கொணரவும் பன்முக அர்த்தம் தரும் வசனங்களைத் தேடிச் செயல்படுவார்கள்.

அவற்றின் உண்மையான அர்த்ததை இறைவனும் நன்கு ஊன்றிக் கற்றுக் கொண்டவர்களும் தவிர வேறு யாரும் அறிய மாட்டார்கள். நாங்கள் இதில் நம்பிக்கை கொண்டோம் - இதில் உள்ள அனைத்தும் எங்கள் இரட்சகரிடமிருந்து வந்தது என்று அவர்கள் கூறுவார்கள். எவர்கள் அறிவுத்திறனுடையவர்களாக இருக்கின்றார்களோ அவர்கள் கவனித்துச் செயல்படுவார்கள். (3:7)

குர் ஆனை எவ்வாறு அணுகுவது என்பதைக் கற்றுத் தரும் இந்த அடிப்படையிலான ஒரு வசனத்தில் இவர்கள் செய்து வைத்திருக்கும் குழப்பங்களின் எதிரொலியே இக்கேள்வி ஆகும். வழக்கம் போல

இக்கேள்விக்கும் ஹதீஸ்களில் பதில் இல்லை என்பதே உண்மை. ஆனால் ஏதோ ஹதீஸ்களில் இன்னின்ன வசனங்கள் முஹ்கமாத் வசனங்கள் என்றும் இன்னின்ன வசனங்கள் முதஷாபிஹாத் வசனங்கள் என்றும் முஹம்மத் நபி கூறிச் சென்றிருப்பதைப் போன்ற ஒரு தோற்றத்தை உருவாக்க முயற்சி செய்கின்றனர்.

எனவே, இவ்விஷயங்களையெல்லாம் ஹதீஸ்கள் தான் கற்றுத்தருகின்றன. ஆகவே நாம் ஹதீஸ்களை அவசியம் பின்பற்ற வேண்டிய தேவை உள்ளது என்று பாமர முஸ்லிம்களை ஏமாற்றி அவர்களை இறைவனின் பாதையில் இருந்து தடுப்பதே இவர்களின் நோக்கம் என்று நாம் அறுதியிட்டுச் சொல்கிறோம்.

இவர்கள் கேட்டிருக்கும் கேள்விகளுக்கு நிச்சயம் ஹதீஸ்களில் பதில் இல்லை. இக்கேள்விக்கு அவர்கள் மனோ இச்சைப்படியும், சுய அபிப்பிராயங்களின்படியும் விளக்கங்கள் கூற முடியுமே அன்றி நேரடியாக இக்கேள்விக்குப் பதில் ஹதீஸ்களில் இல்லை என்பதை வாசகர்கள் அறிந்து கொள்ள வேண்டும். தவிர குர்ஆனை அணுகும் முறையைக் கற்றுக் கொடுக்கும் முக்கியத்துவம் வாய்ந்த நேரடியான கருத்தைக் கூறும் வசனத்தில் கூட முஸ்லிம் 'அறிஞர்கள்' தங்கள் 'திறமை'யைக் காட்டி திருவிளையாடல்களை நடத்தி பற்பல அர்த்தங்களும், விளக்கங்களும், விரிவுரைகளையும் கூறி குர்ஆனைச் சிந்திப்பதற்கு அஞ்சும் பாமர முஸ்லிம்களை ஆட்டு மந்தை களாகவே வைக்க முயல்கின்றனர். இவர்கள்அனைவரும் மக்களைக் குழப்புவதில் ஒற்றுமையாக இருந்தாலும் கூறும் விளக்கங்களில் மட்டும் முரண்பட்டு நிற்பார்கள்.

இப்போது நாம் அவர்களுடைய கேள்விக்குக் குர் ஆனிலிருந்தே பதில்களைத் தருவோம். குர்ஆனில் இரு வகையான வசனங்கள் உள்ளதாகவும், அவற்றில் முதலாவதாக முஹ்கமாத்' வகையான வசனங்கள் என்றும், இரண்டாவதாக 'முதஷாபிஹாத்' வகை வசனங்கள் என்றும் ஆல இம்ரானின் 7வது வசனம் கூறுகிறது. இவற்றில் ஆயாதும் 'முஹ்கமாத்' என்றால் தெளிவான, நேரடியான கருத்தைத் தரும் வசனங்கள் என்றும், 'ஆயாதும் முதஷாபிஹாத்' என்றால் பன்முக அர்த்தங்கள் தருகின்ற வசனங்கள், அல்லது உவமானங்கள் கூறுகின்ற வசனங்கள் என்றும் அர்த்தம் ஆகும்.

எந்தெந்த வசனங்களில் எல்லாம் நேரடியாக, தெளிவாக ஒரே ஒரு பொருளை மட்டும் தருகின்ற வாசகங்கள் உள்ளதோ அவை அனைத்தும் முஹ்கமாத்' வசனங்கள் ஆகும். இத்தகு வசனங்கள் தான் குர் ஆனின் சாரம் என்றும்,

மார்க்கத்தின் அடிப்படை என்று இறைவன் கூறுகிறார். குர்ஆன் முழுவதும் இத்தகைய வசனங்களே அதிகம் உள்ளன. ஆயினும் இத்தகு நேரடியான, தெளிவான வசனங்களைக் கூட ஹதீஸ்களின் துணையோடு சிதைத்து அவற்றுக்கும் பற்பல அர்த்தங்களைக் கூறி "இஸ்லாமிய அறிஞர்கள்" குர்ஆனைப் படிக்காத மக்களை, அவற்றைச் சிந்திக்கத் தயங்கும் பாமரர்களை வழி கெடுக்க முனைகின்றனர்.

உதாரணமாக இந்த வசனம் 3:7 நேரடியான, தெளிவான பொருள் கூறும் வசனமே ஆகும். ஆயினும் இவ்வசனத்தில் கூட கடந்த 1400 வருடங்களுக்குமுன்பிருந்து இன்று வரை முஸ்லிம் அறிஞர்கள் ஏகப்பட்ட சர்ச்சைகள் செய்து வருகின்றனர். அவற்றை இறைவன் நாடினால் பின்னர் நாம் விரிவாக ஆராய்வோம். இது மட்டுமல்ல, இது போன்ற ஏராளமான நேரடியான, தெளிவான வசனங்களையும் ஹதீஸ்களின் அடிப்படையில் திரித்துப் பொருள் கூறிக்கொண்டிருக்கின்றனர்.

உதாரணமாக நரகம் நிரந்தரமானது, அதில் உள்ளே நுழைந்தவர்கள் ஒரு போதும் வெளியேற மாட்டார்கள் என்கிறது குர்ஆனின் நேரடியான வாசகங்கள். ஆயினும் முஹம்மத் நபி இறைவனிடம் - பரிந்துரை செய்து இவர்களை நரகிலிருந்து வெளியேற்றுவார் என்று இந்த முல்லாக்கள் முஸ்லீம் பெயர் தாங்கிகளை ஏமாற்றிக் கொண்டிருக்கின்றனர். இது ஒரு உதாரணம் மட்டுமே. இன்னும் ஏராளம் உள்ளன.

அடுத்தபடியாக முதஷாபிஹாத்' வசனங்கள் என்றால் பன்முக அர்த்தங்கள் தரக்கூடிய, அல்லது உவமானங்கள் கூறக்கூடிய வசனங்கள் என்பதே அதன் அர்த்தம் ஆகும்.

1400 வருடங்களுக்கு முன் அருளப்பட்ட அல்குர் ஆன் அன்று முதல், உலகம் அழியும் இறுதி நாள் வரையில் மனிதர்களுக்கு வழிகாட்ட வேண்டிய இறுதி வேதமாக இருப்பதால் அவற்றில் எல்லாக் காலத்துக்கும் பொருந்தி வரக் கூடிய விதமாக இறைவன் வழிகாட்டல்களை நமக்கு அருளி இருக்கிறார்.

அந்தந்தக் காலத்திற்கும், இடத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்றவாறு நாம் அவற்றைப் பின் பற்ற வேண்டும். அவற்றிற்கு இன்ன துதான் அர்த்தம் என்று நிர்ணயித்துக் கூறி மக்களைக் குழப்பக் கூடாது.

இதற்கு ஒரு உதாரணமாக, வசனம் 24:31ல் இறைவன் பெண்களுக்கான உடையணியும் முறைகளைப் பற்றிக் கூறும் போது, அவர்கள் அவசியமான பகுதிகளைத் தவிரத் தங்கள் உடம்பின் மற்றப்பகுதிகளை

வெளிகாட்டக்கூடாது' என்று வழிகாட்டல் அளிக்கிறார். அவசியமான பகுதிகள்' என்பது இடத்திற்கும், காலத்திற்கும், சூழ்நிலைக்கும் ஏற்ப மாறுபடும் என்பதாலேயே இறைவன் இவ்வாறு பொதுவான ஒரு வழிகாட்டலை அளித்திருக்கிறார். மேலும் பெண்கள் தங்கள் மார்புகளை மறைத்துக் கொள்ள வேண்டும் என்ற ஒரு குறிப்பான கட்டளையையும் அளிக்கிறார். ஆயினும் அவசியமான பகுதிகள் தவிர' என்ற இறைவனின் வார்த்தைகள் இவர்களுக்குத் தெளிவில்லாததாக பட்டதால் (இறைவன் தன் வார்த்தைகள் மிகத் தெளிவானவை என்று குர் ஆனில் வலியுறுத்திக் கூறுகிறார்) அவற்றுக்கு விளக்கமாக அவசியமான பகுதிகள் என்றால் கைகளையும், கால்களையும் தவிர என்று ஒரு சில அறிஞர்களும், கைகளையும், கால்களையும், முகத்தையும் தவிர என்று மற்ற சில அறிஞர்களும் இறைவனின் வார்த்தைகளுக்கு வரம்பு கட்ட முயற்சித்து தலை முதல் கால்வரை கறுப்பு அங்கி கொண்டு மூடும் தண்டனையை, நிர்பந்தத்தை எல்லா முஸ்லீம் பெண்களுக்கும் எல்லாக் காலத்திற்கும், எல்லா இடங்களிலும் கட்டாயமாக்கி வைத்திருக்கின்றனர். இவ்வரம்பு மீறல்கள் முஸ்லீம் பெண்களை இரண்டாம் தரப் பிரஜைகளாகவும் , சுதந்திரமற்றவர்களாகவும் ஆக்கி வைத்திருக்கின்றன. இதன் மூலம் இஸ்லாத்தை நடைமுறைக்கு ஒப்பாத ஒரு கடுமையான மதமாகவும், காலத்திற்கு ஒவ்வாததாகவும், பெண்களை அடக்கு முறை செய்யும் மதமாகவும் சித்தரித்திருப்பதே இவர்களின் கைங்கர்யம் ஆகும். ஆயினும் இத்தகைய கடும் விதிமுறைகளைக் குர் ஆன் கூறவில்லை என்பதே உண்மை. இறைவன் எல்லாக் காலங்களுக்கும் பொருந்தி வரக் கூ டி ய வழிமுறைகளையே குர் ஆனில் கூறுகிறார். இத்தகு பன்முக அர்த்தங்கள் தரும் வசனங்களுடன், உவமானங்கள் கூறும் வசனங்களும் முதஷாபிஹாத்' வசனங்கள் ஆகும்.

உதாரணமாக 2:17, 19, 20, 24-26, 265; 4:56; 7:58, 179; 9: 109, 10:27 போன்ற ஏராளமான வசனங்கள் முதஷாபிஹாத் வகையைச் சேர்ந்தவை ஆகும். மேலும் சுவனம், நரகம் ஆகியவற்றை வர்ணிக்கும் வசனங்களும் முதஷாபிஹாத் வகையைச் சேர்ந்த வசனங்களே ஆகும். இவ்வசனங்கள் அனைத்தும் நம்பிக்கை கொண்டவர்களின நம்பிக்கையை அதிகரிக்கும் வசனங்களாகும். எனவே இத்தகைய வசனங்களுக்கு நாம் ஒரு குறிப்பான பொருளைக் கொடுக்க முயலக் கூடாது. அவற்றின் விளக்கங்களை அவ்வப்போது இறைவன் நம்பிக்கை கொண்டவர்கட்கு சரியான நேரம்

வரும் போது வெளிப்படுத்துவார் என்றுகுர்ஆனில்இறைவன் நமக்குக் கூறுகிறார். (அவசியம் பார்க்க6:67)

எனவே நாம் தெளிவான, நேரடியான பொருள் கூறும் வசனங்களை மட்டுமே இவ்வேதத்தின் சாரமாக, மார்க்கத்தின் அடிப் படையாக எடுத்துச் செயல்பட வேண்டும்.

முதஷாபிஹாத் வசனங்களின் அர்த்தத்தை நாம் தேடி அவற்றுக்கு உண்மையான பொருள் இதுதான் என்று கூறும் உரிமையை இறைவன் நமக்கு அளிக்கவில்லை. குர்ஆனை விளக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட இறைவன் முதஷா பிஹாத் வசனங்களின் அர்த்தத்தை நம்பிக்கை கொண்டோருக்குக் காட்டுவார். அப்போது நாம் இறைவனின் மேல் நம்பிக்கை கொண்டு, நன்கு சிந்தித்து நாம் விளங்கிக் கொண்டதைச் செயல்படுத்த வேண்டும். இதுவே குர்ஆனைப் பின்பற்றும் வழியாகும்.

இறைவன் நாடினால், இவ்வசனம் குறித்த அனைத்துக் கேள்விகளையும் வாசகர்கள் எங்களுக்கு அனுப்பினால் குர்ஆனின் ஒளிகொண்டு அவற்றை நாம் விளங்கிக் கொள்ள முயற்சிக்கலாம்.

வாசகர்கள் குர் ஆன் மட்டும் போதும் என்பற்கெதிராக அவர்கள் எழுப்பும் வாதங்களுக்கும், கேள்விகளுக்கும் உரிய நமது பதில்களைப் படிப்பதுடன் பலதரப்பட்ட கேள்விகளை விடுத்துள்ள அல்முபின் பத்திரிக்கைகாரர்கள் கேள்விகளுக்கான பதில்களை கேட்கவேண்டும். இரு சாராரின் வாதங்களையும் நன்கு செவியேற்று, சிந்தித்து அதில் சிறந்ததை எடுத்துச் செயல்படவேண்டும். இதுவே அறிவுடைமை என்றும், நேர்வழி என்றும் இறைவன் குர் ஆனில் இரு கருத்துக்கு இடமின்றி ஆணித்தரமாக கூறுகிறார். (39:18) -ஆர்

இறைவனின் வார்த்தைகளுக்கு வரம்பு கட்ட முயற்சித்து தலை முதல் கால்வரை கறுப்பு அங்கி கொண்டு மூடும் தண்டனையை, நிர்பந்தத்தை எல்லா முஸ்லீம் பெண்களுக்கும் எல்லாக் காலத்திற்கும், எல்லா இடங்களிலும் கட்டாயமாக்கிவைத்திருக்கின்றனர். இவ்வரம்பு மீறல்கள் முஸ்லீம் பெண்களை இரண்டாம் தரப்பிரஜைகளாகவும்,சுதந்திரமற்ற வர்களாகவும் ஆக்கி வைத்திருக்கின்றன. இதன் மூலம் இஸ்லாத்தை நடைமுறைக்கு ஒப்பாத ஒரு கடுமையான மதமாகவும், காலத்திற்கு ஒவ்வாததாகவும், பெண்களை அடக்குமுறை செய்யும் மதபபாகவும் சித்தரித்திருப்பதே இவர்களின் கைங்கர்யம் ஆகும்.

# இப்ராஹிம் நபியின் கனவில் ஷைத்தான்



எங்கள் இரட்சகரே எனக்கு நல்ல குழந்தைகளை வழங்குவீராக," நாம் அவருக்கு ஒரு நல்ல குழந்தையைப் பற்றிய நற்செய்தியைக் கொடுத்தோம். அவர் அவருடன் சேர்ந்து வேலை செய்யும் அளவுக்கு வளர்ந்தபோது அவர் கூறினார், “என் மகனே, நான் உன்னைப் பலி கொடுப்பது போல் ஒரு கனவு காண்கிறேன். நீ என்ன நினைக்கிறாய்?" அவர் கூறினார், "என் தந்தையே, நீங்கள் செய்ய வேண்டும் என்று கட்டளையிடப் பட்டபடி செய்யுங்கள், இறைவன் நாடினால் நீங்கள் என்னைப் பொறுமையுடன் காண்பீர்கள்.

அவர்கள்இருவரும் அடிபணிந்தனர், மேலும் அவர் அவருடைய முன்னந்தலையைக் கீழே கிடத்தி (பலியிடத்தயாரா)னார். நாம் அவரை அழைத்தோம், “இப்ராஹீமே, நீர் கனவை நம்பி விட்டீர் . இவ்விதம் நல்லோர்க்கு நாம் கூலி கொடுக்கிறோம். அவருக்குப் கஷ்ட மான சோதனையே, அவருக்குப் பகரமாக நாம் ஒரு பிராணியைப் பலியாக்கினோம். (37:100-107)

மேற்கண்ட குர்ஆன் வசனம் இப்ராஹீம் நபி, கனிவு மிகுந்த தன் மகனான இஸ்மாயீலைப் பலி கொடுக்கும் சம்பவத்தை விவரிக்கிறது. இச்சம்பவத்தைப் பற்றி பாரம்பரிய முஸ்லிம்களின் நம்பிக்கை என்ன வென்றால், இஸ்மாயீலைப் பலியிடச் சொல்லி இறைவன் இட்ட கட்டளையை அவர் நிறைவேற்றினார் என்பதேயாகும்.

ஆயினும் மேற்கண்ட வசனங்களையும் குர்ஆனின் வேறு சில வசனங்களையும் நாம் கவனத்துடன் படித்தால் அது வேறு முடிவை நமக்குக் குறிப்பிட்டுக் காட்டு கிறது. இப்ராஹீ மிடம், அவருடைய மகன் இஸ்மாயீலைப் பலி கொடுக்கும்படி இறைவன் கூறவில்லை

.

மேற்கண்ட 37:102 வசனத்தில் இப்ராஹீம் அக்காட்சி இறைவனிடம் இருந்து வந்தது என்று கூறவில்லை. உண்மையில் அவர் நிச்சய மில்லாதவராகவும், தயங்குபவராகவும் இருக்கிறார். எனவேதான் அவர் தன் மகனிடம் கேட்கிறார், " நீ என்ன நினைக்கிறாய்?" தொடர்ந்து இப்ராஹீமின் மகன் தான், அவர் சரியெனக் கண்டதால், தன் தந்தையிடம் அவர் கண்ட கனவை நனவாக்கும் படி கூறி,

அவ்விஷயத்தை முடிவு செய்கிறார். பின்னர் இறைவன் இடையில் குறுக்கிட்டு, அதைத் தடுத்து, இஸ்மாயீலுக்குப் பகரமாக ஒரு மகத்தான பலியை ஆக்குகிறார். இஸ்மாயீலைப் பலியிடச் சொன்னது இறைவன் தான் என்றால் அவர் அதைத் தடுத்து நிறுத்தி, அதற்கு பதிலாக வேறொன்றைப் பலியாக ஆக்கியிருப்பாரா என்பதை நாம் சிந்திக்க வேண்டும் (இதிலும் விட்டலாச்சார்யா கதைகளில் வருவதைப் போல் கல்லையும் உடைக்குமளவுக்குக் கூராக கத்தியில் மூன்று முறை வெட்டியும் தலை வெட்டுப்படவில்லை என்றெல்லாம் ஏராளமான மனிதக் கற்பனைகளையே இன்றைய முஸ்லிம்கள் இறைவனின் வார்த்தைகள் என்றும் மார்க்கம் என்றும் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

இவை மேற்கண்ட 37:100-107 வசனங்களில் உள்ள தகவல்களே ஆகும். இவை நம்மை ஆராயச் சொல்கிறது. மேலும் இவர்களின் வாதப்படி இப்றாஹிமிடம் இஸ்மாயீலை பலியிடச் சொன்னது இறைவன் தான் என்றால் அது தெளிவான நேரடியான மற்ற வசனங்களுக்கு நேரடியாக முரண்படுவதாகவும் அமைகிறது.

"…. நீதியை நிலை நாட்டுவதற்காக அன்றி, நீங்கள் கொலை செய்யக் கூடாது. இறைவன் உயிர்களைப் புனிதமாக ஆக்கி இருக்கிறார். நீங்கள் புரிந்து கொள்ளும் பொருட்டு33 உங்களுக்கு அவருடைய கட்டளைகளாகும்.(6:151)

இவ்வசனத்தில் இருந்து மனிதப் பலி கொடுப்பது தடுக்கப்பட்டது என்று நாம் கற்றுக் கொள்கிறோம். பின் எப்படிமனிதப்பலி கொடுக்கும் படிகூறுவார்? இஸ்மாயீலின் உயிர் புனிதமானதில்லையா? நல்லவர் மகனான இஸ்மாயீலைப் பலி கொடுப்பதில் என்ன நீதி, நியாயம் இருக்க முடியும்?

விபத்தாகத் தவிர, ஒரு நம்பிக்கையாளர் மற்றொரு நம் பிக்கையாளரைக் கொல்லக்கூடாது. (4:92)

இப்றாஹீமும் இஸ்மாயீலும் நல்ல இறை நம்பிக்கையாளர்கள். ஒரு நம்பிக்கையாளரான இஸ்மாயீலைப் பலி கொடுக்கும் படி மற்றொரு நம்பிக்கையாளரான இப்றாஹீமுக்கு ஒரு போதும் கட்டளையிட்டிருக்க முடியாது (மாட்டார்). எனவே இஸ்மாயீலைப் பலி கொடுக்க இப்றாஹீம் துணிந்தது ஒரு தவறாகவே இருக்க முடியும். இறைவன் நம்பிக்கையாளர்களை ஒருபோதும் தவறை நோக்கி வழிநடத்துவதில்லை.

.

பாரம்பர்ய முஸ்லிம்களின் விளக்கம் என்ன வென்றால், இறைவன் இஸ்மாயீலைக் கொல்ல அனுமதிக்கவில்லை - இப்றாஹீ முக்கு ஏற்பட்ட ஒரு சோதனை தான் இது, என்பதே.

ஆனால் நாம் இறைவன் மட்டுமே எதிர்காலத்தை அறிந்தவர் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். (அவர்) இப்றாஹீமையும் இஸ்மாயீலையும் பொறுத்தவரை இறைவன் குறுக்கிட்டுக் காப்பாற்றுவார் என்பதை அவர்கள் அறிந்திருக்க வில்லை , எதிர்பார்த்திருக்கவும் இல்லை. அவ்வாறென்றால் அது ஒரு கடுமையான சோதனை' யாக இருந்திருக்க முடியாது. அவர்கள் இருவரையும் பொறுத்தவரை அது ஒரு தவறே ஆகும். இறைவன் ஒரு போதும் நம்பிக்கையாளர்களைத் தவறு செய்யும்படி ஏவுவதில்லை.

உங்களுக்கு நேரிடும் எந்த நல்லதும் இறைவனிடமிருந்து வந்ததாகும், மேலும் உங்களுக்கு நேரிடும் எந்தத் தீமையும் உங்களிடமிருந்தே வந்ததாகும். (4:79)

இப்றாஹீம் கண்ட காட்சி இறைவனிடமிருந்து வந்ததில்லை என்பதற்கு வசனம் 4:79 ஒரு தெளிவான குறிப்பைக் காட்டுகிறது. வசனம் 6:151ல் இருந்து நீதமின்றி மனிதப்பலி கொடுப்பதில் எந்த நன்மையும் இல்லை, மாறாக அது தடை செய்யப்பட்ட ஒன்று என்றும் அறிந்து கொள்கிறோம். மேலும் ஒரு தந்தை தன் நல்ல மகனைக் கொல்வதில் எந்த நன்மையும் இல்லை. மேலும் இஸ்மாயீலைப் பொறுத்தவரை, அவர் கொல்லப்படுவதில் எந்த நன்மையும் இல்லை . அதுவும் குறிப்பாக இக்காட்சி யாரிடமிருந்து வந்தது என்று உறுதியில்லாத நிலையில் தவிர இறைவன் இதில் குறுக்கிடுவார் என்பதையும் அவர்கள் அறியமாட்டார்கள்.

நம்முடைய கண்ணோட்டத்தை வலியுறுத்துவதற்காக நாம் மீண்டும் கூறுவோம். 'உங்களுக்கு ஏற்படும் எந்த நன்மையும் இறைவனிடமிருந்து வந்தது' இது உடனடியாக நம்மிடம் கூறுவதென்ன வென்றால் இறைவன் இஸ்மாயீலைக் காப்பாற்றுவதற்கு முன் நிகழ்ந்தவை எதுவும் நல்லது இல்லை. அவை அனைத்தும் கெட்டவையே. அக்காட்சியும் இறைவனிடமிருந்து வந்ததில்லை - முழு சம்பவத்திலும் இஸ்மாயீல் காப்பாற்றப்பட்டது ஒன்று மட்டுமே நல்லது. இதுவே இறைவன்செய்தது.இவ்வுண்மைக ளை மறுத்துச் சொல்ல மனிதப்பலியை இறைவன் முதலில் அனுமதித்து இருந்தார் என்றும் கூறத் தலைப்படு கின்றனர். ஆயினும் இக்கருத்துக்கு புதிய ஏற்பாட்டிலும்பழைய ஏற்பாட்டிலும் எந்த ஆதாரமுமில்லை. தவறான கருத்தாக இருந்தாலும், இறைவன் மனிதப்பலியை அனுமதித்து இருப்பார் என்ற இந்த எண்ணமேவெறுப்புக்குரியதாகவும், தீயதாகவும் இருக்கிறது. இது நிராகரிக்கும் கயவர்களின், ஷைத்தானை வணங்குபவர்களின் செயலாகவே இருந்து வந்துள்ளது. தவிர87:19 கூறுவதையும் பாருங்கள் இது முன்னர் உள்ள பாடங்களிலும்

பதியப்பட்டுள்ளது, இப்றாஹீம் மற்றும் மூஸா ஆகியோரின் பாடங்களிலும்.

எனவே 6:51,4:92 ஆகியவற்றில் உள்ள விஷயங்கள் இப்றாஹீம் மூஸா ஆகியோருக்கும் பொருந்தும் அல்லவா? மேலும் மனிதப்பலி எந்த வேதத்திலும் விதிக்கப்படவில்லை என்ற உண்மையையும் நாம் அறிந்திருக்கிறோம். ஆம்! இறைவன் ஒரு போதும் மனிதப்பலியை விதிக்கவில்லை.

மாறாக இப்றாஹீ முக்கும், மூஸாவுக்கும், முஹம்மதுக்கும் அவர் விதித்தது பிராணிபலி மட்டுமே.

பிராணிப்பலி உங்கள் மீது இறைவனால் விதிக்கப்பட்டுள்ளது உங்கள் நன்மைக்காகவே.

மேலும் இறைவன் மிகவும் கருணை மிக்கவர். அவர் ஒருபோதும் தன் சட்டங்களை தானே மீறமாட்டார் (7:28)

காருண்யரான இறைவன் மனிதப்பலி கொடுக்கும் படி கேட்டார் என்று எண்ணுபவர்கள் சொர்க்கம் நுழைவது மிகவும் கடினமானகாரியமே. இறைவனைப் பற்றிய இத்தீய எண்ணம் ஓர் இறைநிந்தனையாகும். இஸ்மாயீலை பலி கொடுக்கும்படி இறைவன் கேட்டதாகக் குர் ஆனில் எங்கும் இல்லை. மாறாக அவர் குறுக்கிட்டுக் காப்பாற்றவே செய்தார். சாத்தானின் சூழ்ச்சியிலிருந்து இப்றாஹீம் இஸ்மாயீல் ஆகிய இருவரையும் காப்பற்றவே செய்தார். மேலும் அவர் இப்றாஹீமிடம் கூறினார் 'நீர் கனவை நம்பி விட்டீர்' (37:105) சந்தேகத்திற்கிடமின்றி நிச்சயம் அது ஷைத்தானால் ஏற்பட்டகனவே ஆகும். இறைவனின் மாற்ற முடியாத சட்டம் "இறைவன் பாவத்தை ஒருபோதும் ஏவுவதில்லை"(7:28)

இஸ்மாயீலைப் பலி கொடுக்கும்படி இறைவன் கட்டளையிட்டதாகக் குர்ஆனில் இல்லாதிருந்த போது, இக்கருத்தோட்டம் எவ்வாறு நுழைந்தது. இது பைபிளில் கூறப்பட்டு உள்ள கற்பனைச் சம்பவம் ஆகும்.

ஆரம்பகால இஸ்லாமிய அறிஞர்கள் குர்ஆனைக் கற்றுக்கொடுப்பதற்குப் பதில், அதன் வசனங்களுக்கு மேல் விவரமாக பைபிளிவ் இருந்து விளக்கம் கூற முற்பட்டனர். குர் ஆனின் ஒளியில் தான் நாம் பைபிளை ஆராயவேண்டுமே அன்றி எதிர்மறையாக அல்ல என்று குர்ஆன் நமக்குக் கற்றுக் கொடுக்கிறது.

மேலும், பைபிளின் தவறான கருத்துக்கள் குர்ஆனில் நுழைக்க முடியாவிட்டாலும், ஹதீஸ்கள் என்னும் பின்வாசல் வழியாக இஸ்லாத்திற்குள் நுழைக்கப்பட்டு விட்டன. இவை முஹம்மத் நபி இறந்து 200 வருடங்களுக்குப்பின், அதைத் தடுக்க நபி உயிருடன் இல்லாதநிலையில் இணைவைப் பாளர்களால் மார்க்க மாக்கப்பட்டது.

# யார் பொய்யர்கள் என்பதை நாளை அறிந்து கொள்வார்கள்

Dr. ரஷாத் கலீஃபா ஆசிரியராக இருந்த ஆங்கிலச் சிற்றிதழான 'MUSLIM Perspective' என்ற மாத இதழில் இருந்து எடுத்து பிரசுரிக்கப்படுகிறது.

அஹமத் தீதாத் என்ற இஸ்லாமிய உலகம் நன்கறிந்த இஸ்லாமியப் பிரசாரகர் முதலில் Dr. ரஷாத் கலீஃபாவின் அற்புதமான அத்தாட்சியான 19ன் அற்புதத்தை நன்கு விளங்கிக் கொண்டு அதனை உலகமெங்கும் பிரசாரமும் செய்தார். புத்தகத்தில் எழுதி 19 என்ற அற்புதம் இஸ்லாமிய உலகம் முழுவதும் பரவுவதற்குக் காரணமாக இருந்தார்.

ஆயினும் 19 என்ற அற்புதத்தின் தொடர்ச்சியாக, அன்றைய அரபுகளால் குர்ஆன் மற்றும் அதன் கருத்துக்கள் சிதைக்கப்பட்டிருப்பதை எடுத்துக் காட்டி தன்னை மெய்ப்பிக்கும் தூதர் என்று ரஷாத் கலீஃபா அறிவித்த போது அதனை ஏற்க மறுத்து அவரைப் பொய்யர் என்றார்.

இங்கே அஹ்மத் தீதாத் தான் பொய்யர் என்பதற்கான தஸ்தாவேஜைத் தந்திருக்கின்றோம்.

தீதாத், ரஷாத் கலீஃபாவை விவாதத்திற்கு அழைத்து ஒரு தந்தி தந்தி கிடைத்த அதே நாளில் மெய்ப்பிக்கும் தூதர் அச்சவாலை ஏற்று அவருக்கு ஒரு பதில் தந்தியும் அனுப்பி வைத்திருக்கிறார்.

ஆயினும் தீதாத், Dr. ரஷாத் தன் சவாலை ஏற்க மறுத்து விட்டதாக அச்சடித்துப் பிரசாரம் செய்ய ஆரம்பித்து விட்டார். ஆனால், அவர் அமெரிக்காவில் தந்தி அனுப்பினால் அனுப்புபவருக்கு தேதி, நேரத்துடன் கூடிய தந்தியின் (Confirmation Copy) நகல் கொடுக்கப்படும் என்பதை அறியவில்லை. அஹ்மத் தீதாத் அனுப்பிய தந்தியின் நகலும் அதற்குப் பதிலாக மெய்ப்பிக்கும் தூதர் அனுப்பிய தந்தியின் நகலும் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

தந்தியின் வாசகங்களின் மொழி பெயர்ப்பும் கீழே கொடுக்கப் பட்டுள்ளது.

**அஹமத் தீதாதின் தந்தி:**

ரஷாத் கலீஃபா அல்கத்தாபுக்கு (பொய்யன்) நீ இறைவனின் தூதர் என்று பொய்யாக வாதிப்பதை விட்டு விடுமாறும் கேட்டுக் கொள்கிறேன்,

## DEEDAT: A PROVEN KAZZAB

Here is documented proof that Ahmed Deedat, nova dedicated servant of Shaytan, is a liar. Mr. Deedat seni a telegram challenging me to dedate him. I sent a telegram back, ON THE SAME DAY, accepting his challenge. Obviously. Mr Deedat is ignorant of the fact that here in USA, we receive a confirmation copy of any telegram me send, complete with the date and time. So, Mir. Deedat published his BIG lies stating that I did not accept his Mimsy and cowardly challenge. Here are the photocopies proving that he is the real

(KAZZAAB)

TO RASHAD KHALIFAALKAZZAA8
BESEECH YOU TO RENOUNCE YOUR FALSE $CLAIMS TO MESSENGERSHIP OF GOD AND ACCEPT MUHUMMED IBNU ABDILLAH AS THE | FINAL PROPHET (NABEE) AND MESSENGER (RASOOL) - OF ALLAH.IF YOU FAIL TO DO THIS THEN I CHALLENGE YOU TO AN OPEN DEBATE TO DISPROVE ALL YOUR FALSE CLAIMS AT THE MADISON SQUARE GARDEN NEW YORK - THE CENTER OF ACTIVITIES IN THE USA WE WILL PAY ALL THE COSTS INCURRED. AHMED DEEDAT (SERVANT OF ISLAM)

4-0224398142002 05/21/88 ICS IPMRNCZ
1 602791389 MGM TDRN UG TUCSON AZ
05-21 0359p EST

TO AHMAD DEEAT, SERVENT OF SHATAN, I ACCPT YOUR CHALLANGE. I NAME THE PLACE.
RASHAD KHALIFA

முஹம்மத் இப்னு அப்துல்லாவை இறுதி நபியாகவும், இறுதித் தூதராகவும் (ரசூல்) ஏற்றுக் கொள்ளு மாறும் கேட்டுக் கொள்கிறேன். இதை நீ செய்யா விட்டால் நான் உன்னை பொது விவாதத்திற்கு அழைக்கிறேன். அமெரிக்கா வின் முக்கிய பகுதியான மேடிஸன் ஸ்கொயர் கார்டனில் வைத்து உன் பொய்யை நிரூபிப்பேன். நாங்களே எல்லாச் சலவுகளையும்ஏற்று கொள்கிறோம்.

**பதில்தந்தி:**

அஹ்மத் தீதாத் என்னும் ஷைத்தானின் சேவகனுக்கு, நான் உன் சவாலை ஏற்றுக் கொள்கிறேன், இடத்தை நான்முடிவு செய்கிறேன்.

**ரஷாத்கலீஃபா**

குர்ஆனின் முன்னறிவிப்பு மெய்ப்பிக்கும் தூதரை இவர்கள் பொய்யன் என்று அழைப்பார்கள் என்பதைக் கூறுகிறது (38:4-5) எனவே அதே கத்தாப் என்ற வார்த்தையைப் பிரயோகிக்கும் படி நம்ப முடியாத விதத்தில் இறைவனின் மறைமுகமான திட்டங்களால் அஹ்மத் தீதாத் நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறார். மேலே கொடுக்கப்பட்ட அஹ்மத் தீதாத்தின் தந்தி முழுதும் ஆங்கிலத்தில் இருந்தாலும் கத்தாப் (பொய்யன்) என்ற வார்த்தை மட்டும் அரபியில் இருப்பதைக் கவனியுங்கள்!!. 'தங்களிலிருந்தே ஒரு எச்சரிப்பவர் வந்தது பற்றி இவர்கள் ஆச்சர்யப்படுகிறார்கள். நிராகரிப்போர் கூறுகின்றனர். இவன் ஒரு -

சூன்யக்காரன். ஒரு கத்தாப் (பொய்யன்). அனைத்துக் கடவுள்களையும் ஒன்றாகஆக்கிவிட வேண்டுமென்று அவர் விரும்புகிறாரா? நிச்சயமாக இது ஆச்சர்யமானது! (38:45)

'அவர்கள் கூறினர்: "நம்மைப் போன்ற ஒரு மனிதனையா நாம் பின்பற்றுவது? அவ்வாறென்றால் நாம் தவறிழைத்தவர்களாகவும், முட்டாள்களாகவும் ஆகிவிடுவோம். நமக்கு செய்தி வராமல் அவருக்கு வந்து விட்டதோ? நிச்சயமாக அவர் வெளிப்படையான பொய்யர்." நாளை அவர்கள் கத்தாப் யாரென்பதை அறிந்து கொள்வார்கள். (54:24-25)

தீதாத் பிரயோகித்த வார்த்தைகள் அப்படியே குர்ஆனின் முன்னறிவிப்போடு ஒத்துப் போகிறது. அதே நேரத்தில் இந்நிகழ்ச்சியின் மூலம் அஹ்மத் தீதாத் பொய்யன் என்பதை உலகுக்கு இறைவன் அறிவிக்க நாடியதையும் விளங்கிக் கொள்ள முடிகிறது.

இவ்விவாதத்தில் இருந்து தப்பிக்க, நடக்க முடியாத விதிமுறைகளை, (உதாரணமாக மேடிஸன் ஸ்கோயர் கார்டனில் விவாதத்தை வைத்து கொள்ளும்படி கூறுவது. மேடிஸன் ஸ்கோயர் கார்டன் அமெரிக்காவின் பரபரப்பு நிறைந்த, பொது விவாதங்கள் நடத்த அனுமதி கிடைக்காத இடமாகும்.) அஹ்மத் தீதாத் விதித்திருப்பதைக் கவனிக்கவும்! ✡ - ஆர்

தீதாதின்தந்தி

ரஷாத் கலீஃபா
அல்கத்தாபுக்கு
(பொய்யன்) நீ
இறைவனின் தூதர்
என்று பொய்யாக
வாதிப்பதை விட்டு
விடுமாறும் கேட்டுக்
கொள்கிறேன், முஹம்மத்
இப்னு அப்துல்லாவை
இறுதி நபியாகவும்,
இறுதித் தூதராகவும்
(ரசூல்) ஏற்றுக் கொள்ளு
மாறும் கேட்டுக்
கொள்கிறேன். இதை நீ
செய்யா விட்டால் நான்
உன்னை பொது
விவாதத்திற்கு
அழைக்கிறேன்.
அமெரிக்கா வின் முக்கிய
பகுதியான மேடிஸன்
ஸ்கொயர் கார்டனில்
வைத்து உன் பொய்யை
நிரூபிப்பேன். நாங்களே
எல்லாச் செலவுகளையும்
ஏற்று கொள்கிறோம்.

பதில்தந்தி

அஹ்மத் தீதாத் என்னும்
ஷைத்தானின்
சேவகனுக்கு, நான் உன்
சவாலை ஏற்றுக்
கொள்கிறேன்,
இடத்தை நான் முடிவு
செய்கிறேன்.
ரஷாத் கலீஃபா

# புனித புத்தகம் குர்ஆன்




ஜீனத்

இறைவன் தனது சர்வ வல்லமையை நாம் அறிந்து கொள்ளும் வார்த்தைகளாகத் தந்த புனிதப் புத்தகம் குர் ஆன் ஆகும். இந்தப் புத்தகத்தை அவரே வடிவமைத்து தலைப்புகளிட்டு வசனங்களை வரிசைப்படுத்தி எண்களிட்டு நமக்கு அளித்திருக்கின்றார்.

இதில் மனிதர்களுக்கு எந்தவிதமான பங்கீடும் கிடையாது. முஹம்மத் நபிக்கு அவருடைய தாய்மொழியில் குர்ஆனை அந்தந்தக் கால கட்டத்திற்கு ஏற்றவாறு வசனங்களை வெளிப்படுத்தினாலும் அவற்றை வரிசைப்படுத்தி அமைக்கும் முறையையும் இறைவன் அவருக்குக் கற்றுக் கொடுத்தார். எனவே நாம் இறைவன் வரிசைப்படுத்தித் தந்த முறைப்படி குர் ஆனை அணுக வேண்டுமே தவிர, அந்த வசனங்கள் வெளியான காலத்தையோ, அதற்கான காரணத்தையோ தெரிந்து கொள்ள வேண்டும் என்பது நமக்குக் கட்டாயக் கடமையில்லை.

இன்றையகற்றறிந்த ஆலிம்களிடம் ஒரு வசனத்தை நாம் கூறினால், அது எப்போது இறங்கியது? காரணம் என்ன? என்று சிந்திக்கத் தலைப்பட்டு விடு கின்றனர். குர் ஆன் முழுமையாக்கப்பட்டு விட்டதென்றும் அகில உலகத்தாருக்கும் இதுவே வழிகாட்டியாகும் எனவும் இறைவன் தனது குர்ஆனில் கூறுகின்றார் (16:115, 41:44) குர்ஆனின் உண்மையான தாக்கத்தை அடைய முடியாமல் எவ்வாறு நாம்தடுக் கப்பட்டிருக்கிறோம் என்பது பற்றி சற்று விரிவாக இங்கு அறியத் தருகிறோம்.

இப்போது; நம் கைவசம் இருக்கும் குர்ஆன் இருவகையான பிரிவுகளைக் கொண்டிருக்கிறது என்று நாம் அறிந்து கொள்ள முடிகிறது. இறைவன் ஏற்படுத்தித் தந்த பகுதிகள் தலைப்பிடப்பட்டு அவை ஒரு ஒழுங்கு முறையுடன் கூடிய குர்ஆனாக இருக்கிறது. ஆனால் மனிதர்கள் குர் ஆனை 'ஜுஸ்வுக்கள்' என்று முப்பது பிரிவுகளாகப் பிரித்து அவற்றின் ஆரம்ப வசனங்களைக் கருப்பு நிறத்தில் அடையாளமிட்டு ஒரு குழப்பமான மன நிலையை நமக்கு ஏற்படுத்தி விட்டனர்.

இறைவன், தனது புனித வசனங்களை 114 பகுதிகளாகப் பிரித்து ஒவ்வொன்றிற்கும் தலைப்பிட்டு மிக எளிதாக நமக்குப் புரியும்படி அழகிய முறையில் அமைத்துத் தந்திருக்கின்றார். இந்த 114 சூராக்களும் (9வது சூரா தவிர ) 'பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர் ரஹீம்' என்று மிக அழகிய முறையில் ஆரம்பமாகின்றன.

இவ்வாறு இறைவன் நமக்குப் பகுதிகளை அமைத்துத் தந்த முறைப்படி குர்ஆனை நாம் படிக்க ஆரம்பிக்கும் போது ஒவ்வொரு சூராவின் ஆரம்பமும் நம் மனதில் பதிந்து கொள்வதும், சூரா 9ல் பிஸ்மி' இல்லை என்பதையும் 27வது சூராவின் இடையில் ஒரு பிஸ்மி' அதிகமாக வருகிறது என்பதையும் வெளிப்படையாக நாம் அறிந்து கொள்ளமுடியும். குர்ஆனை அறிந்து கொள்ள உதவும் இம்மாதிரியான சிறு சிறு உண்மைகளை விட்டுக்கூட நம்மை விலக்கிவிட ஷைத்தான் செய்த சூழ்ச்சியே மாற்று முறையிலான பிரிவுகள் ஆகும். இவைதான் வேதத்தின் உண்மையான பகுதிகள் என்று எண்ணிக் கொண்டு அவற்றை அணு கும்படி செய்வதே இந்த ஷைத்தானின் நோக்கமாகும். சாதாரணமாக அன்றாடம் குர் ஆனை ஓதுபவர்கள் ஜுஸ்வு' கணக்கில்தான் ஓதுகின்றனர். இவர்களிடம் இறைவன் தலைப்பிட்டுத் தந்த சூராக்களைப் பற்றி கேட்டால் வருத்தத்திற்குரிய விஷயமாக அவற்றை அறியாதவர்களாகவே அவர்கள் இருக்கின்றனர். இவர்கள் அவற்றை அறிய முற்படுவதும் இல்லை. குர்ஆனை உச்சரித்துக் கொண்டிருந்தாலே நன்மை என்ற தவறான எண்ணத்தில் அவர்கள் விரைவாக குர்ஆனை ஓதி ஓதி முடிக்கின்றனர். பல ஆண்டுக் கணக்கில் குர்ஆனை ஓதிக் கொண்டிருப்பவர்கள் கூட இந்த ஜீஸ்வு' கணக்கை மட்டுமே தெரிந்து வைத்திருக்கின்றனர் என்பது வருந்தத்தக்க விஷயமாகும். இவ்வாறு மனிதர்களாக ஏற்படுத்திய பிரிவுகள் மக்களை நிராகரிப்பின் பக்கம் விரைந்து அழைத்துச் சென்று விடுகின்றது. மேலும் குர் ஆனின் உண்மையான கருப்பொருளை நாம் அறிய முடியாத வண்ணம் செய்து விடுகின்றனர்.

மேலும் குர்ஆன் அருளப்பட்ட முறை பற்றியும் விளக்கமாகக் காண்போம். குர்ஆன் வசனங்கள் மக்காவிலும் மதினாவிலுமாக 23 வருடங்கள் வெளிப்படுத்தப் படுகின்றன. முதல் பத்து வருடங்கள் முஹம்மத் நபி மக்காவில் வசிக்கின்றார். அவர் ஒரு மக்கா வாசியாவார். நபித்துவம் அவரது

நாற்பதாவது வயதில் அவருக்கு அககபபட்டது. அளிக்கப்பட்டது. நாற்பது வயதிலிருந்து பத்து வருடங்கள் அவருக்கு மக்காவில் குர்ஆன் வெளிப்படுகின்றது. இந்த காலகட்டத்தில் வெளியான சூராக்கள் மக்கத்து சூராக்கள் என்று அழைக்கப்படுகின்றன.தலைப்புகள் இடப்பட்டு வசனங்கள் சிறுகச் சிறுக அருளப்படுகின்றன. அந்தந்த கால கட்டத்திற்கேற்ப வசனங்கள் வெளியாகின்றன. இவற்றில் விடுபட்ட வசனங்கள் மதினாவிற்கு முஹம்மத் நபி சென்ற பின்னர் வெளியாகின்றன. மக்காவில் தலைப்பிடப்பட்ட சூராக்களின் விடுபட்ட வசனங்கள் மதினாவில் வெளியான வசனங்கள் என்று குறிப்பிடப்படுகின்றன. முஹம்மத் நபிக்கு குர்ஆன் வெளியான பத்தாவது வருடத்தில் அவர் மக்காவாசிகளால் துன்பமிழைக் கப்பட்டு மதினாவிற்கு ஹிஜ்ரத் செய்கின்றார். ஹிஜ்ரத்திற்குப் பின்னர் 13 வருடங்கள் மதினாவில் குர்ஆன் வெளிப் படு கின்றது. மதினாவில் 13 வருடங்களாக வெளியான சூராக்கள் மதினத்து சூராக்கள்' என்று தலைப்பிடப் பட்டிருப்பதை நாம் குர்ஆனிலிருந்து அறிந்து கொள்ளலாம். மதினத்து சூராக்களின் வசனங்கள் மதினாவில் வெளிப் படுத்தப்பட்டிருப்பதையும் ம தி னா வி லே யே முழுமையாக்கப் பட்டனஎன்பதையும் குர்ஆன் தலைப்புகளையும் அவற்றில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்களையும் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். விதிவிலக்காக சூரா 8ன் 30 முதல் 36 முடிய உள்ள வசனங்கள் மதினத்து சூரா என்று தலைப்பிடப்பட்டு மக்காவில் அருளப்பட்டிருக்கிறது. இவ்வசனங்களைக் கவனித்துப் படித்தோமானால் இவை நபியின் ஹிஜ்ரத்தின் போது வெளியானவை என்பதை நாம் அறியலாம். பின்னரே மதினாவில் சூரா 8 தலைப்பிடப்பட்டு 30 முதல் 36 முடிய இவ்வசனங்கள் வரிசைப்படுத்தப்படுகின்றன. இவை இறைவன் ஏற்படுத்திய வரிசை முறையாகும். குர்ஆன் வசனங்கள் அந்தந்தக் காலகட்டத்திற்கேற்ப வெளிப் படுத்தப்பட்டிருந்தாலும், முழுமை பெற்ற குர்ஆன் எல்லா காலத்திற்கும் எல்லா மக்களுக்கும் ஒரு நேர்வழி காட்டியாகும். மேலும், குர்ஆன் வசனங்கள் அனைத்துமே அந்த காலகட்டத்தில் வசித்த மக்களுக்கு வெளியானவை என்று ஒருவர் நினைத்துக் கொண்டு இருந்தாரானால் அது ஒரு அபத்தக் கற்பனையே ஆகும். அந்தக் காலகட்ட மக்கள் விளங்கிக் கொள்ள இயலாதவாறு சிலபல வசனங்கள் வெளிப் பட்டிருக்கின்றன. அவை குறித்து இறைவன் அவை உதாரணம்

கூறும் வசனங்கள் என்றும் விசுவாசிகள் அவற்றையும் இறைவனுடைய வசனங்களே என்று நம்பிக்கை கொள்ளுமாறு சுட்டிக் காட்டுகின்றார். (வசனம்3:7ஐக்காண்க).இவ்வசனங் களை மக்கள் ஆராய்ந்து அதிலேயே உழன்று கொண்டிருக்கத் தேவையில்லை என்பதாக இறைவன் கூறியிருக்கின்றார். (3:7). பின் எதற்காக இவற்றை நமக்கு கூறுகின்றார்? சர்வ வல்லமையுள்ள இறைவன் தனது வார்த்தைகளை வீணடிப்பதில்லை (18:109) எனவே இவற்றை அறியக்கூடிய காலம் வரும் வரை விசுவாசிகள் காத்திருக்க வேண்டும் என்ற இறை கட்டளை வசனம் 3:7ல் மறைபொருளாகக் கூறப்பட்டிருப்பதை அறிந்து கொள்ளலாம். (பார்க்க 6:67) இதற்கு முந்தைய வேதங்களிலும் இவ்வாறு மறைபொருளான வசனங்கள் இருந்திருக்கின்றன. யூதர்களில் உள்ள உண்மை விசுவாசிகள் ஈஸாநபியின் வருகையை எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள். கிறிஸ்தவர்களில் உண்மை விசுவாசிகள் முஹம்மத் நபியின் வருகையை எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள். இவர் தான் தாங்கள் எதிர்பார்த்த நபி என்பதை அவர்கள் தங்களுடைய வேதத்திலிருந்தே அறிந்து கொண்டார்கள்.

அவர் கூறும் வார்த்தைகள் இறைவனின் வார்த்தைகளே என்பதை மனப்பூர்வமாக அறிந்து விசுவாசம் கொண்டனர். அதேபோல 1400 வருடங்களாக உண்மையான விசுவாசிகளின் காத்திருத்தல் தற்போது முற்றுப்பெற்று விட்டது. சர்வ வல்லமையுள்ள இறைவன் நம்மீது புரிந்திருக்கும் பேரருள் இதுவேயாகும். வசனம் 3:7-ல் குறிப்பிடப்படும். மறைபொருளான வசனங்களுக்கு பொருளறியும் காலம் வந்துவிட்டது. இறைவன் தனது தூதரை அனுப்பி அவற்றை உண்மை விசுவாசிகளுக்கு விளங்கச் செய்கின்றார். இந்த மேலான கூட்டத்தினரில் நம்மையும் பங்கு கொள்ளச் செய்த வல்ல இறைவனுக்கே எல்லாப் புகழும்!

**இறைவன் ஏற்படுத்தித் தந்த பகுதிகள் தலைப்பிடப்பட்டு அவை ஒரு ஒழுங்கு முறையுடன் கூடிய குர்ஆனாக . இருக்கிறது. ஆனால் மனிதர்கள் குர்ஆனை 'ஜுஸ்வுக்கள்' என்று முப்பது பிரிவுகளாகப் பிரித்து அவற்றின் ஆரம்ப வசனங்களைக் கருப்பு நிறத்தில் அடையாளமிட்டு ஒரு குழப்பமான மனநிலையை நமக்கு ஏற்படுத்தி விட்டனர்.**

# முகம்மது நபியை எவ்வாறு இணை வைக்கிறோம்?

இறை வணக்கம் என்றால் பெரும்பாலோர் நம்பிக் கொண்டிருப்பது இறைவனை தொழுவது. துதி செய்வது என்பதுதான். ஆனால் தொழுவதும், துதி செய்வதும் இறை வணக்கத்தில் ஒரு மிக முக்கிய சிறிய பகுதியாகும். அது ஆன்மா இறைவனுடன் தொடர்பு கொள்கின்ற சில சடங்குகளாலான பயிற்சியாகும். எல்லா மதத்தினரைப் போலவே முஸ்லிம்களும் சில சடங்கு முறைகளைக் கொண்டு இறைவனைத் தொழுதும், (திக்ரு) துதி செய்தும் வருகின்றனர். கடமை முடிந்து விட்டதாகக் கருதி இறைவனை வணங்கி விட்டதாக திருப்திப்பட்டுக் கொண்டு அவர்களின் பிற காரியங்களில் மூழ்கி விடுகின்றனர். இது முற்றிலும் தவறே ஆகும். இறைவனுக்கு செய்யக்கூடியதான வணக்கம், தொழுகை, துதி (திக்ரு) இம்மூன்றும் வேறுபட்ட பரிமாணங்களைக் கொண்டது என்பதை சற்று பார்ப்போம்.

வணக்கம்: வணக்கம் என்றால் மரியாதை செய்வது, மதிப்பது, பணிவது, கீழ்படிவது என்றெல்லாம் பொருள் கொள்ளலாம். இருப்பினும் இறைவணக்கம் என்ற சொல்லுக்கு இறைவனுக்கு பணிந்து, கீழ்படிந்து நடப்பது என்பது பொருள்.

முஸ்லிம்களுடைய இறைவணக்கம் என்ன என்று பார்ப்போம். முஸ்லிம் என்ற அரபுச் சொல்லுக்கு Submitter என்று ஆங்கிலத்திலும், கீழ் படிந்தவர்கள் என்று தமிழிலும் அர்த்தம். அல்லாஹ் என்ற அரபுச் சொல்லால் அழைக்கப்படு கின்ற கடவுள் என்கின்ற அந்த ஏக இறைவனின் கட்டளைகளுக்கும், சட்டங்களுக்கும் கீழ்ப்படிவது வணக்கம் ஆகும்.

அந்த இறைவனின் சொல்லான திருக்குர் ஆனுக்கு கீழ்ப்படிவது, அதன்படி நடப்பது மட்டுமே வணக்கம் ஆகும். குர்ஆனோடு வெறுஎதனையும் பின்பற்று பவர்கள் வேறொன்றையும் அதனை உருவாக்கியவர்களையும் இறைவனுக்கு இணையாக வணங்குபவர் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

"அல்லாஹ்வுக்கு வணக்கத்தை தூய்மையாக் கியவர்களாக,பிடிப்புள்ள வர்களாக, அல்லாஹ்வை அவர்கள் வணங்க வேண்டும். தொழுகையை நிலை. நாட்ட வேண்டும். மேலும் ஜகாத்தை அவர்கள் வழங்க வேண்டும். என்பதைத் தவிர அவர்களுக்கு கட்டளைஇடப் படவில்லை. இதுதான் நேரான மார்க்கமாகும்". (98:5)

மேற்சொன்ன வசனத்தில் இதுதான் நேரான மார்க்கம் என்று இறைவன் கூறுவது மூன்று விஷயங்கள்தான் .(1) தூய்மையோடும் பிடிப்புடனும் செய்யப்படும் வணக்கம். (2) நிலைநாட்டப்படும் தொழுகை (3) ஜகாத் (நிர்ணயிக்கப்பட்ட தர்மம்). நேரான மார்க்கத்தின் முதல் அம்சமான வணக்கம் அதாவது கீழ்படிதலை, கட்டளைகளை ஏற்று நடப்பதை இறைவனுக்கு மட்டும் செய்ய வேண்டும் என்றும் "தூய்மையாக்கியவர்களாக" அதாவது வேறு எவர் கட்டளைக்கும், ஏவுதலுக்கும் கீழ்படிந்து வணக்கத்தை மாசுபடுத்தாமல், அதாவது இறை கட்டளைக்கு கீழ்படிவது போலவே நபிமார்கள்,தூதர்கள், அவுலியாக்கள், மகான்கள், அறிஞர்கள், ஆலிம்கள் போன்ற அல்லாஹ்வின் அடிமைகளின் சொந்தக் கருத்துக்களுக்கு, சொற்களுக்கு கீழ்படிந்து நடந்து மாசுபடுத்தாமல் இறை வணக்கத்தை தூய்மையாக்கியவர்களாக என்றும் "பிடிப்புள்ளவர்களாக" அதாவது மிகுந்த ஈடுபாட்டோடு, எத்தகைய சூழ்நிலையிலும், மனந்தளராமல் இறைகட்டளைக்கு மட்டும் அடி பணிந்து நடக்க வேண்டும். நபியின் பெயரால் கூறப்படும் ஹதீஸ்கள் போன்ற பொய் செய்திகளுக்கோ காலம் காலமாக செய்யப்படுகிற, உலகில் உள்ள பெரும்பாலோர் செய்து வருகிறார்கள், மார்க்க அறிஞர்கள் சொல்லி விட்டார்கள் என்ற காரணம் காட்டியெல்லாம் அலைக் கழிக்கப் படாமல், இறை வசனத்தில் மட்டும்பிடிப் புள்ளவர்களாக அல்லாஹ்வை வணங்க வேண்டும். அல்லாஹ்வின் சொல்லான குர் ஆனுக்கு மட்டும் கீழ்படிய வேண்டும் என்றும் புரிந்து கொள்ள வேண்டும்.

மேற்கண்ட பாராவை படிக்கும் போது உங்கள் மனதில் "அல்லாஹ்வுக்கு கட்டுப்படுங்கள், தூதருக்குக் கட்டுபடுங்கள்" என்ற வசனம் இருக்கிறதே என்ற கேள்வி எழும்.

இறைவன் மனிதர்களுடன் நேரடியாக தொடர்புகொள்வ தில்லை.இறைச் செய்திகளை தூதர்களுக்கு கொடுத்து அவர்கள் மூலமே மனிதர்களை அச்சமூட்டி எச்சரிக்கை செய்கிறார். நேர்வழி காட்டுகிறார். இறைவன் இதுதான் நேரான மார்க்கம் என்று ஒன்றைக் கூறுகையில், தூதர்கள் மற்றும் பற்பலவற்றை மார்க்கம் என்று சொல்வதில்லை. தூதுச் செய்தியின் அடிப்படையிலேயே அவர் தூதராக இருக்கிறார். தூதுச் செய்திக்குக் கட்டுப்படுவது தான் தூதருக்குக் கட்டுபடுவதாகும். தூதர் என்ற மனிதரின், இறைச் செய்திக்கு அப்பாற்பட்ட சொந்த செயல்களும், ஏவல்களும் மார்க்கமாகாது. இறைச் சொல்லான குர்ஆன் மட்டுமே மார்க்கமாகும். (அதிகமான விளக்கங்கள் முந்தைய இதழ்களில் கட்டுரைகளாக வந்துள்ளன).

"தொழு கையை நிலைநாட்டுங்கள்" என்ற இறைக் கட்டளை மேற்படி வசனத்தில், வணக்கத்தை தூய்மையாக்கி யவர்களாகவும், பிடிப்புள்ள வர்களாகவும் அல்லாஹ்வை வணங்க

வேண்டும் என்ற கட்டளைக்கு பிறகு தனியாகக் கூறப்படுகிறது.

"ஸலாத்" என்ற தொடர்புத் தொழுகையானது நாம் இறைவனுடன் தொடர்பு கொள்கின்ற நிலையாகும். அதனால் நமக்கு ஆத்ம பலமும் உறுதியும் கிடைக்கிறது. நேரடியான இறைத் தொடர்பில் நாம் நமது பிரார்த்தனையின் மூலம் இறைவனின் உதவியையும், வழிகாட்டுதலையும் பெற்றுக் கொள்கிறோம். சிறிய தவறுகளுக்கான மன்னிப்பையும் வேண்டிப் பெறுகிறோம்.

ஆனால் குர்ஆனில் உள்ள இறைக் கட்டளைக்கு மாற்றமாக நாம் செய்கின்ற மிகுதியான ஒலு, தொழுகையில் துணை சூரா, அத்தஹியாத்து, சுன்னத்து, தொழுகை, நபில் தொழுகை போன்றவற்றின் வரம்பு மீறல்களால் நம் தொழுகையில் இறைத் தொடர்பு கிடைக்காமல் போய்விடும். நாம் நஷ்டவாளிகள் ஆகி விடுகிறோம். என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. (சரியான ஷஹாதத், சரியான தொழுகை பற்றிய கட்டுரைகள் முந்தைய இதழ்களில் அழகிய முறையில் விவரிக்கப்பட்டுள்ளது).

1) இறைவனுக்கு இணையாக முகம்மது நபியை வணங்குவது என்பது பற்றிப் பார்ப்போம்.

நாங்கள் எல்லோரும் அல்லாஹ்வைத்தான் வணங்குகிறோம்.தூதரான முகம்மது நபியை எப்படி வணங்க முடியும்? என்று கோபமாக அநேகர் மறுப்புத் தெரிவிக்கின்றனர்.மார்க்கமாக நம்பி கீழ்ப்படிந்து நடப்பதுதான் வணக்கம் என்பதன் அர்த்தம் என்று விளங்கிய இந்த நிலையில் சிந்தனை செய்து பாருங்கள். அல்லாஹ்வுடன் சேர்த்து முகம்மது நபியையும் வணங்குகிறீர்கள் என்பது புரியும்.

2) "லா இலாஹ இல்லல்லாஹ்"

வணக்கத்திற்குரியவர் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் இல்லை, என்ற அடிப்படையான விஷயத்தையே மார்க்கமாக போதிக்குமாறு எல்லா நபிமார்களுக்கும் நாம் அறிவித்து இருக்கிறோம் என்று குர்ஆனில் இறைவன் கூறியிருக்கிறார்.

வணக்கத்திற்குரியவர் அதாவது கீழ்ப்படிந்து நடக்கத்தக்கவர் இறைவனைத் தவிர யாரும் இல்லை என்றால் என்ன பொருள்? கீழ்ப்படிதல் அல்லாஹ்வின் அடிமைகளான ஆதம் முதல் முகம்மது நபி வரை மற்றும் மலக்குமார்கள், ஜின்கள், சைத்தான்கள், அவுலியாக்கள், அறிஞர்கள், தலைவர்கள், ஆலிம்கள் என்று யாருக்கும் இல்லை என்றுதானே பொருள். இவ்வாறு இருக்கையில் அதற்கு களங்கம் ஏற்படுத்தி, இதுவரை உலகில் எந்த நபியும் இறைவனுடன் தன் பெயரையும் இணைத்துக் கூறாதிருக்க "முகம்மது ரஸூலுல்லா" என்ற தனியான வாக்கியத்தை **அல்லாஹ்வுடன் இணைத்துக்கூறி, இணை வைத்து வணங்குகின்றனர்.**

3) அல்லாஹ்வை திக்ரு (துதி) செய்வது போன்றே முஹம்மது நபியையும் ஸலவாத்து என்ற பெயரில்

இறைவனுக்கு இணையாக, ஏன் அதற்கும் அதிகமாக திக்ரு செய்து வணங்கி வருகின்றனர். மேலும் ஸலவாத்து கூறுவதால் நோய் நிவாரணமும் பலப்பல நன்மைகளும் பாவமன்னிப்பும் நரகத்தில் இருந்து மீட்சியும் கிடைக்கும் என்று **இறைவனுக்கு இணையாக நபியை நம்பிக்கை கொண்டுள்ளனர்.**

4) குர்ஆன் மட்டுமே வஹி என்றும் பின்பற்றப்பட வேண்டியது என்றும், மார்க்கம் என்றும் முகம்மது நபி மூலம் இறைவன் கூறியிருக்க, நபியின் காலத்திற்கு பின்னர் நபியின் பெயரால் குர்ஆனுக்கு எதிராகவும், முரணாகவும் ஏற்படுத்தப்பட்ட ஹதீஸ்களும் வஹிதான், மார்க்க ஆதாரம்தான் என்று கூறி **நபியை வணங்கி வருகின்றனர்.**

5) நபிமார்களுக்குள் பேதம் பாராட்டாதீர்கள் என்று இறைவன் கூறியிருக்க முகம்மது நபி சிறந்த நபி, நபிமார்களுக்கெல்லாம் தலைவர் என்றெல்லாம் தனித்துப் பெருமை படுத்தி பேதம் பாராட்டுகின்றனர். மேலும் இறைவன் மறுமையில் தண்டனை அளித்தாலும் முகம்மது சிபாரிசு செய்வார், காப்பாற்றுவார் என்று நம்பி **இறைவனைக் காட்டிலும் ஒரு மடங்கு அதிகமாக வணங்கி வருகின்றனர்.**

6) வானத்திற்கும் பூமிக்கும் அல்லாஹ்வே இரட்சகர் என்று குர்ஆன் கூற, மாறாக முகம்மது நபியை ஈருலக இரட்சகர், எம்பெருமானார் என்று இறைவனுக்கு **இணையாக போற்றி இணை வைத்து வணங்குகின்றனர்.**

7) நபி உங்களைப் போன்ற மனிதரே தூதுச் செய்தியை எத்தி வைப்பதல்லாமல் வேறுகடமை அவருக்கு இல்லை. குர்ஆனைத் தவிர வேறு எதையும் மார்க்கம் என்று அவர் மனோ இச்சைப்படி பேசுபவரல்லர். குர்ஆனின் வசனங்களை அவர் மாற்றிக் கூறியிருப்பாரானால் நபியின் நாடி நரம்பை தரித்திருப்போம். வஹியை நிறுத்தியிருப்போம். நபியின் இதயத்தின் மீது முத்திரை இட்டிருப்போம் (42:24) என்றெல்லாம் இறைவன் குர்ஆன் முழுக்க எச்சரிக்கை செய்து நபியை வணங்கி விடாதீர்கள் என்று சூசகமாக கூறியிருக்க நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம், இணை வைப்பின் மூலம் நரகத்தை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறோம். சிந்தியுங்கள். வணக்கம் பற்றி குர்ஆன் கூறவதை கவனியுங்கள்.

**7:162கூறும் மெய்யாகவே என்னுடைய தொழுகையும் என்னுடைய வழிபாடும், என்னுடைய வாழ்வும், என்னுடைய மரணமும் அகிலங்களின் இறைவனாகிய அல்லாஹ்வுக்கே உரியவனாகும்.**

7:163அவருக்கு யாதோர் இணையுமில்லை. இவ்வாறே நம்பிக்கை கொள்ள நான் கட்டளை இடப்பட்டுள்ளேன். இறைவனுக்கு கீழ்படிவோரில் (S u b m i t t e r) முதன்மையானவனாக உள்ளேன்.

3:150 அல்லாஹ் மட்டுமே உங்களுடைய அதிபதியும், இரட்சகரும் இன்னும் அவரே உதவி செய்பவர்கள் அனைவரிலும் சிறந்தவர்.

2:21மனிதர்களே! நீங்கள் உங்களையும், உங்களுக்கு முன்னிருந்தோரையும் படைத்த உங்கள் இறைவனைய வணங்குங்கள். நீங்கள் பயபக்தி உடையோராகலாம்.

இறைவன் அல்லாத வேறு யாரையெல்லாம் வணங்குகிறீர்கள்? அதாவது வேறு மனிதர்களின் சொற்களுக்கும், கட்டளைகளுக்கும் கீழ்படிகிறீர்கள். இல்லவே இல்லை என்று சொல்ல வாய் திறக்கிறீர்களா? கீழே படியுங்கள்.

• இறைவனுக்கு இணையாக முஹம்மதுநபி மற்றும் முகையித்தீன் அப்துல்காதிர் ஜீலானி போன்றோரை வணங்குவது.

• மத்ஹப்களின் இமாம்களான ஹனபி. ஷாபி. ஹம்பல், மாலிக், ஹதீஸ்களை உருவாக்கிய புஹாரி, தீர்மீதி போன்றோரை வணங்குவது.

• அவுலியாக்கள், மகான்களை வணங்குவது

• ஆலிம்களை, முல்லாக்களை வணங்குவது.

• மனோ இச்சைப்படி அகந்தையாக நடப்பது கொண்டு தன்னையே வணங்குவது (25:43)

12:40 “அவரையன்றி நீங்கள் வணங்கிக் கொண்டிருப்பவை யாவும் நீங்களும் உங்கள் மூதாதையரும் வைத்துக் கொண்ட (வெறும் கற்பனைப்) பெயர்களேயன்றி வேறில்லை. அவற்றிற்கு அல்லாஹ் யாதொரு ஆதாரத்தையும் இறக்கி வைக்கவில்லை. அல்லாஹ் ஒருவருக் கேயன்றி (வேறொருவருக்கும்) அதிகாரம் இல்லை. அவரையன்றி (வேறு எவரையும்) நீங்கள் வணங்கக் கூடாது என்று அவர் (உங்களுக்குக்) கட்டளையிட்டிருக்கிறார். இதுவே நேரான மார்க்கமாகும். ஆனால் மனிதர்களில் பெரும்பாலோர் இதனை அறிந்து கொள்வதில்லை.

(22ஆம் பக்க தொடர்ச்சி)

ஹதீஸ்களைத் தந்தவர்கள்தான் நமக்குக் குர்ஆனையும் தந்திருக்கின்றார்கள் என்கிறார். இத்தகைய நயவஞ்சகர்களுக்கு பதிலளிக்கும் விதமாகவே இறைவனின் முத்திரை 19' என்ற அற்புதம் விளங்குகிறது என்று நம்பிக்கை கொண்டவர்கள் அறிந்திருக்கின்றார்கள். மேலும் குர்ஆன் வெறும் செவிவழிச் செய்தியல்ல அவை சத்தியமான இறைவனின் வார்த்தைகள், என்ற உறுதியையும் பெற்றிருக்கின்றார்கள்.

மேலும் அவர் இறைவனின் கட்டளைகளில் 99.9999 காரிய சாத்தியமற்றவை என்றொரு மாபெரும் பழியையும் சுமத்தி இருக்கிறார். இதற்கு அவர் கொடுக்கும் விளக்கம் என்ன வென்றால் மனிதர்களில் பெரும்பாலோர் (99.9999 என்று இவர் கூறுகிறார். இந்த கணக்கு இவருக்கு யார் அறிவித்தது? ஹதீஸ்களிலும் இல்லையே? இறைவனின் வார்த்தைகளில் தங்கள் இஷ்டத்திற்கு இவர்கள் விளையாடுவதை வாசகர்கள் கவனிக்க வேண்டும்.) நரகத்திற்குரியவர்கள் என்று கூறும் குர்ஆன் அவர்களை நேர்வழியில் அழைக்க வேண்டும் என்பதையும் கடமை ஆக்குகிறதாம். எனவே இறைவனின் கட்டளைகளில் 99.9999 காரிய சாத்தியமற்றவையாம். கல்லில் நார் உரிப்பதைப் போன்றதாம். இன்னும் என்னென்னவோ பிதற்றியிருக்கிறார். நம்பிக்கை கொண்டவர்கள் இறைவனின் மார்க்கத்தில் சிரமல் இல்லை என்றும், இறைவன் நமக்குச் சிரமத்தை நாடவில்லை என்றும் (5:6, 22:78) நன்கு அறிந்து இருக்கிறார்கள். அபூஅப்தில்லாவின் இக்கருத்து அவர் இஸ்லாத்தையும், குர்ஆனையும் புரிந்து கொண்டிருக்கும் இலட்சனத்தையே காட்டுகிறது.

மேலும் அவர் இறைவனின் கட்டளைகள் அறிவுக்குப் பொருந்தாதவையாகவும் உள்ளன என்று கூறுகிறார். எனவே இறைவனின் கட்டளைகளை நாம் சிந்திக்கக் கூடாது, அப்படியே செயல் படுத்த வேண்டும் என்று கூறுகிறார். தன்னைச் சிறந்த சிந்தனையாளர் என்று எண்ணிக் கொண்டிருக்கும் அபூஅப்தில்லா எல்லா இதழ்களையும் படியுங்கள், அவற்றில் சிறந்ததை எடுத்துச் செயல் படுத்துங்கள் என்று இதுவரை பிரசாரம் செய்த அபூஅப்தில்லா அடித்திருக்கும் அந்தர் பல்டி. ஏமாற்று ஒலிம்பிக்ஸில் உலகச் சாதனையாகும்!.

இறைவனின் அடிமையான ஆதமுக்கு சிரம் பணிய மறுத்ததால் ஷைத்தான் அல்லாஹ்வின் கோபத்திற்கு ஆளானது போல் முஹம்மது நபிக்குக் கீழ்படிய (ஹதீஸ்களுக்கு) மறுப்பதன் மூலம் குர்ஆன் மட்டும் மார்க்கம் என்பவர்கள் நரகம் நோக்கிச் செல்கிறார்கள் என்று மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போட்டிருக்கிறார். ஹதீஸ்களின் வடிவில் நபி உயிருடன் நம்மோடு இருப்பதாக எண்ணுகிறாரோ என்னவோ? என்றென்றும் உயிருடன் இருப்பதும், முக்காலம் முழுமையும் அறிந்திருப்பதும் இறைவன் மட்டுமே என்று நம்பிக்கை கொண்டவர்கள் நன்கறிந்திருக்கின்றார்கள். மேலும் தூதருக்குக் கட்டுப்படுங்கள் என்பதற்கு தூதரின் தூதுச் செய்திகளுக்குக் கட்டுப்படுங்கள் என்றுதான் அர்த்தமே அன்றி தூதர் பெயரால் இட்டுகட்டப்பட்ட பொய் செய்திகளுக்குக் கட்டுப்படுவதல்ல என்பதையும் நம்பிக்கையாளர்களுக்கு இறைவன் தெளிவுபடுத்தி இருக்கின்றார்.

இத்தகைய மாபெரும் அவதூறுகளை இறைவன் மீது துணிந்து கூறியிருக்கும் அபூஅப்தில்லா இறைவனின் தண்டனையை எதிர்பார்த்திருக்கட்டும்! இறைவன் நிச்சயமாக இத்தகையவர்களை பழி வாங்குவார்.

குர்ஆன் ஆய்வு மைய வெளியீடுகள்

முஸ்லிம்களுக்கு

# 19

# கேள்விகள்

இன்றைய முஸ்லிம்களின் தவறான பாரம்பரிய நடைமுறைகளை சுட்டிக்காட்டி சரியான இஸ்லாத்தின் (அடிபணிதல்) பக்கம் அனைத்து மக்களையும் புதிய சகாப்தத்தை நோக்கி அழைக்கிறது

## அறிவிப்பு

ரஷாத் கலிபாவின் ஜும்மா பயான்கள் ஆங்கிலத்திலும் தமிழிலும். ரஷாத் கலீபாவின் குர்ஆன் வகுப்பு ஆடியோ தமிழ், ஆங்கிலம், உருது, குர்ஆன் ஆடியோ. குர்ஆன் மட்டுமே மார்க்கம் ஹதீஸ்கள் மார்க்கம் அல்ல என்பது பற்றி தெளிவான குர்ஆன் வசனங்கள் கூடிய ஜும்மா பயான்கள், குர்ஆன் ஹதீஸ் இஸ்லாம் புத்தகம், முஸ்லிம்களுக்கு 19 கேள்விகள் புத்தகம், புதிய நினைவூட்டல் புத்தகங்கள் கிடைக்கும். மிகக் குறைந்த விலையில் ஆங்கிலம், தமிழ், குர்ஆன் Amazon, Flipkart மூலியமாக கிடைக்கும்.

www.kadavulmattum.org

அளவற்ற அருளும் நிகரற்ற அன்பும் உடைய
இறைவனின் திருப்பெயரால்

# பிரகடனம்

- அனைத்து மக்களுக்கும் ஒருங்கிணைந்த மார்க்கம்.
- அல்குர் ஆன் சந்தேகமின்றி அகிலங்களின் அதிபதியிடம் இருந்து வந்ததே.
- இறுதி வேதம், அது இறைவனிடம் இருந்து வந்ததுதான் என்பதற்கான தெளிவான அத்தாட்சிகளை தனக்குள்ளேயே கொண்டதாக இருக்கிறது. அது மனித சக்திக்கு அப்பாற்பட்ட முறையில் கணித அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளது.
- இது, இறைவன் தான் சத்தியம் என்பதையும், அவர் மரணித்தவரை உயிர்ப்பிப்பார் என்பதையும் அவர் அனைத்திற்கும் ஆற்றல் உடையவர் என்பதையும் நிரூபிக்கிறது.
- எல்லா இறைதூதர்களும் தந்த செய்திகளை ஒருங் கிணைத்து ஒரே செய்தியாக உலகிற்கு தருகிறது.
- முற்றிலும் இறைவனுக்கே அடிபணிதல் இறைவனை மட்டுமே வணங்கி, வணக்கத்தை கலப்பின்றி அவருக்கு மட்டுமே செய்தல்

ஓர் உலகம்
ஓர்-இறை
ஒரே செய்தி

Book - Post

To

*If undelivered Please return to*

புதிய நினைவூட்டல்

SB Graphic Design And Printers
+91 824 854 1120,+91 877 825 7662